AUGUST 03, 2020
MONDAY
VOL: 006/063
RS. 10.00
LATE CITY ★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

## வெற்றிபெறச் செய்வதற்கு ‘ஒன்றிணையவும்’



இம்முறை பொதுத் தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை வெற்றிபெறச் செய்வதற்கு, அனைத்து மக்களையும் ஒன்றிணையுமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார். தங்கல்ல பிரதேசத்தில், நேற்று (02) நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் இறுதி தேர்தல்

தொடர்ச்சி P2

## கட்சியை எவரிடத்திலும் ‘கையளிக்கமாட்டேன்’



ஐக்கிய தேசிய கட்சியின் உள்ளிருந்து கொண்டும், வெளியிலிருந்துகொண்டும் அந்தக் கட்சியை அழிக்க எவராலும் முடியாதெனத் தெரிவிக்கும் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசிய கட்சியைப் பாதுகாக்க முன்வரும் இளைஞர்களைத் தவிர, வேறு எவரிடத்திலும் கையளிக்கமாட்டேன் என்றார். நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஐக்கிய தேசிய கட்சியின் பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம்,

தொடர்ச்சி P2

## மின்சாரக் கட்டணங்களை ‘மீளச் செலுத்துவோம்’



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக, மார்ச், ஏப்ரல் மாத மின்சாரக் கட்டணத்துக்கு நிவாரணம் வழங்குவதாகத் தெரிவித்து, இந்த அரசாங்கம் மக்களை நன்றாக ஏமாற்றியதாகத் தெரிவித்த, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ,

தொடர்ச்சி P2

## சட்டம் வகுக்கத் தெரிந்தவர்களை ‘நாடாளுமன்றுக்கு அனுப்பவும்’



சொந்தக் கிராமத்தில், 75 இலட்சம் செலவில் சமாதி கட்டியவர்களுக்கு, அந்தக் கிராமத்து மக்களுக்குக் குடிநீரைப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனது, வேடிக்கையென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். இவ்வாறானவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதைத் தவிர்த்து, சட்டம் வகுக்கத் தெரிந்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ச்சி P2

## சிறுபான்மையினர் ‘தீர்மானிக்க வேண்டும்’



அமைச்சுப் பதவிகளை யார் வகிக்க வேண்டும் என்பதான நிலைமை சிறுபான்மைச் சமூகத்தின் தீர்மானத்திலேயே தங்கியுள்ளதெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் ரிஷாட் பதியூதீன், சமூக அபிலாசைகளுக்காகச் செயற்படும் தாம்,

தொடர்ச்சி P2

## தமிழ் மக்களுக்கு ‘முக்கியத் தேர்தல்’



எஸ்.நிதர்ஷன்

தேர்தலின் பின்னர், புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டி, ஒரு வருடத்துக்குள் புதிய அரசியல் சாசனத்தை நிறைவேற்றி, தமது பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்களுக்கு இது முக்கியமான தேர்தலாகும் என்றார்.

தொடர்ச்சி P2

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### வாக்களிப்பது எப்படி?

**வாக்கை அடையாளமிடலும் விருப்புகளை அடையாளமிடலும் பற்றிய சுருக்க விளக்கம்**

**வாக்குச் சீட்டின் மாதிரி**

| | | |
|---|---|---|
| அ கட்சி | * | |
| ஆ கட்சி | * | |
| இ கட்சி | * | X |
| ஈ கட்சி | * | |
| உ கட்சி | * | |
| சுயேச்சைக் குழு 1 | * | |
| சுயேச்சைக் குழு 2 | * | |
| சுயேச்சைக் குழு 3 | * | |
| சுயேச்சைக் குழு 4 | * | |
| சுயேச்சைக் குழு 5 | * | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 X | 2 X | 3 X | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | | | | | | | |

இது வாக்குச் சீட்டொன்றின் மாதிரியொன்று மாத்திரமே

* ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் சின்னம்

- அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவற்றுக்குரிய சின்னங்களுடன் மேல் பகுதியில் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு சின்னத்துக்கும் எதிரே ஒரு வெற்றுக்கூடுள்ளது. நீங்கள் விரும்பும் எந்தவொரு கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவுக்கோ அதற்குரிய சின்னத்துக்கு எதிரேயுள்ள வெற்றுக் கூட்டினுள் உங்கள் வாக்கை அடையாளமிட முடியும். வாக்கை அடையாளமிடும்போது நீங்கள் விரும்பிய சின்னத்துக்கு எதிரேயுள்ள வெற்றுக் கூட்டினுள் “புள்ளடியொன்றை ("X")” இடுதல் வேண்டும்.
- ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒதுக்கப்பட்ட இலக்கங்கள், தேர்தல் மாவட்டத்துக்குள் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குச் சீட்டின் கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளன. விருப்புகளை அடையாளமிடும்போது, நீங்கள் விரும்பிய வேட்பாளரின் மூன்றுக்கு மேற்படாதவாறு வேட்பாளர்களுக்கு அதாவது, மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கையான வேட்பாளர்களுக்கு அதாவது மூன்றுக்கு மேற்படாத இலக்கங்கள் மீது உங்கள் விருப்புகளை அடையாளமிட முடியும்
- ஒரு கட்சிகுழு சார்பாக வாக்கொன்று அடையாளமிடப்படாத ஒரு வாக்குச்சீட்டு செல்லுபடியாகாது. அதற்கு எந்தவொரு பெறுமதியும் இல்லையென்பதுடன், அது நிராகரிக்கப்படலாம்.
- முதலில் வாக்குகளை அடையாளமிட வேண்டுமென்பதோடு, அதன் பின்னர் விருப்புகளை அடையாளமிட முடியுமென்பதை தயவுடன் கவனத்தில் கொள்ளவும்.
- வாக்களிப்பதற்கு புள்ளடியை ("X") மாத்திரம் பயன்படுத்தவும்
- **குறிப்பு: 2020 ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டு**

## மஹிந்த தேசப்பிரிய பதவியை துறக்கிறார்?



தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, செப்டெம்பர் 15ஆம் திகதியன்று, தனது பதிவியை இராஜினாமாச் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார். இது தொடர்பில், இன்றைய தினம் முக்கிய அறிவிப்பொன்றை அவர் விடுப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

தன்னுடைய பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னரே,

தொடர்ச்சி P2

## ரணிலிடம் சஜித் விசேட கோரிக்கை



ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து, மக்கள் பிரதிநிதிகளை வெளியேற்றுவதைத் தாமதப்படுத்துமாறு, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவால், ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இன்று கூடுகிறது அரசமைப்பு பேரவை

அரசமைப்பு பேரவையின் மற்றுமொரு கூட்டம், அதன் தலைவரும் எட்டாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகருமான கரு ஜயசூரிய தலைமையில் இன்று (03) கூடவுள்ளது.

இதில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உள்ளிட்ட அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

“மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு



தொடர்ச்சி P2

## கழுகுக்குப் பின் பூனை சிக்கியது



- **1 கிராம் 7 மில்லி கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது**

சிறைச்சாலைக்குள் போதைப்பொருள்கள், சிம் அட்டைகள் உள்ளிட்ட சட்டவிரோதமான பொருள்களைக் கடத்துவதற்கு, பயிற்சியளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பூனையொன்று, சிறைச்சாலை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பௌத்த மத கொடி வர்ணங்கள் கம்பங்களில் தீட்டப்பட்டுள்ளன



தெஹிவளையில், உள்வீதியொன்றின் இருமருங்குகளிலும் இருக்கும் மின்கம்பங்களில், பௌத்த மத கொடியில் இருக்கும் வர்ணங்கள் பௌத்த கொடியைப் போலவே நிறம் தீட்டப்பட்டுள்ளன.

மூவின மக்களும் வாழும் அப்பகுதியில், இவ்வாறு வர்ணம் தீட்டப்பட்டுள்ளமை தொடர்பிலான படங்கள், சமூக வலைத்தளங்களில் பதவிவேற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், பௌத்த சமயக் கொடியின் வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ளமைக்கு சமூக வலைத்தளங்களின் ஊடாக கடுமையான கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“நாய் மூத்திரம் அடிக்கிற மின்கம்பங்களில், பௌத்த கொடியைக் கீறலாம்; ஆனால்,

தொடர்ச்சி P2



## வாருங்கள், வாக்களியுங்கள் ‘அச்சம் வேண்டாம்’

வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்குள் எந்தவகையிலும் கொரோனா வைரஸ் தொற்றுவதற்கான வாய்ப்புகள் வெகுகுறைவெனத் தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, வாக்களிப்பு நிலையங்களுக்கு வாருங்கள், வாக்களியுங்கள் என, அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஆற்றை ஆழப்படுத்தல் தடுத்து நிறுத்தம்

செ. கீதாஞ்சன், சண்முகம் தவசிலன்

முல்லைத்தீவு, வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்தும் செயற்பாடுகள், முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது.

நேற்று (02) முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயற்பாடு, தேர்தல் விதிமுறை மீறலெனக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்தே, ஆழப்படுத்தும் செயற்பாடுகள் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## 3 வாக்குகளுக்கு ஒரு பெட்டி

ஒகஸ்ட் 5ஆம் திகதியன்று நடத்தப்படும் வாக்களிப்புக்கு, மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில், மூன்று வாக்காளர்களுக்கு மட்டும் வாக்குப் பெட்டியொன்று அனுப்பிவைக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு வாவியின் நடுவே, மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு மேற்காக அமைந்துள்ளது மாந்தீவு.



தொடர்ச்சி P2

## ஷானிக்கு வருத்தம்



கம்பஹா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ், ஒகஸ்ட் 7ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் பொலிஸ் அதிகாரி ஷானி அபேசேகர, சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மஹர சிறைச்சாலையின் இல 1, வாட்டிலிலேயே அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருடைய சுகவீனம் காரணமாக, சிறைச்சாலை வைத்தியசாலையில்,

தொடர்ச்சி P2

## இலங்கையில் கொவிட்-19 முதல் குழந்தை பிரசவம்



கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு, அறுவைச் சிகிச்சையின் மூலமாக, சிசுவொன்று பிறந்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான, கர்ப்பிணியொருவர் சிசுவொன்றைப் பிரசவித்தமை இதுவே முதல் தடவையாகும்.

டுபாயிலிருந்து ஜூலை 10ஆம் திகதியன்று நாடு திரும்பிய மேற்படி கர்ப்பிணிப் பெண், கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அங்கு தனிமைப்படுத்தப்பட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## வெற்றிபெறச் செய்வதற்கு 'ஒன்றிணையவும்'



பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர், பருத்தித்துறையில் இருந்து தேவேந்திர முனைவரை வேறுபாடின்றி அபிவிருத்திகளை செயற்படுத்துவோமென்றார்.

"கொவிட் தொற்று சமயத்தில் அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு, ஒருபோதும் மீளப் பெறப்பட மாட்டாது. பெண்களின் பாதுகாப்புக்காக, தற்போதுள்ள சட்டங்களை திருத்தி புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்" எனவும் பிரதமர் கூறினார்.

## கட்சியை எவரிடத்திலும் 'கையளிக்கமாட்டேன்'

தேர்தல் பிரசாரக் கூட்டம், மத்திய கொழும்பு தொகுதியில், நேற்று (02) நடைபெற்றது, அதில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், ரவி கருணாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக 2 பில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ள நிலையில், அந்த வழக்கை வெற்றிகொள்ளும் பட்சத்தில் நட்டஈடாகக் கிடைக்கும் தொகையை, ஐ.தே.கவின் நிதியத்துக்குக் கையளிக்க வேண்டுமெனவும் கோரினார்.

அதற்கு முன்னராக, தேர்தலை வெற்றிக்கொண்டு, ஐ.தே.க ஆட்சி அமைக்க வேண்டியது அவசியமெனவும், ரணில் தெரிவித்தார்.



## மின்சாரக் கட்டணங்களை 'மீளச் செலுத்துவோம்'



தான் வெற்றிப்பெற்று, தனது தலைமையின் கீழ் அமைக்கப்படும் அரசாங்கத்தில் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான மின்சாரக் கட்டணங்களைச் செலுத்திய நுகர்வோருக்கு, அந்த மின்சாரக் கட்டணங்களைத் திருப்பிச் செலுத்தவுள்ளதாகவும் உறுதி வழங்கினார்.

நேற்று (2), மத்திய கொழும்பில் நடைபெற்ற இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சட்டம் வகுக்கத் தெரிந்தவர்களை 'நாடாளுமன்றுக்கு அனுப்பவும்'

நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில், நேற்று (02) நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரதான தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், 70 வருடங்களுக்கும் அதிகமாக, நான்கு செல்வந்தக் குடும்பங்களை ஆட்சி அதிகாரத்தில் அமர்த்திய காலம் போதுமானதெனவும் இனி அந்தக் காலத்தை மாற்றியமைப்பது அவசியமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், கொழும்பில் போட்டியிடும் சரத் வீரசேகர, தான் புலிகளைக் கொன்றதாகக் கூறி, சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முயல்கிறார் எனவும் தெரிவித்தார்.



# 'தீர்மானிக்க வேண்டும்'

அந்தப் பதவிகளுக்காக யாரிடமும் கையேந்தப் போவதில்லையெனவும் கூறினார்.

வவுனியா - பட்டாணிச்சூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், மக்களின் ஆணையை மதித்து, அமைச்சுப் பதவிகளைத் தூக்கியெறிந்து, புதிய அரசாங்கத்தை உருவாக்க வழியமைத்துக் கொடுத்தோமெனவும் பதவிகளை தாம் ஒருபோதுமே பொருட்டாக எண்ணியவர்கள் அல்லரெனவும் கூறினார்.

பொதுத் தேர்தல் இரண்டு அணிகளுக்கிடையிலான போட்டிக் களப் பரீட்சையாகப் பார்க்கப்படுகின்றதெனத் தெரிவித்த அவர், இந்தப் போட்டியில் இன ஒற்றுமைக்காகப் பாடுபடும் அணியில், சிறுபான்மைக் கட்சிகளும் முற்போக்குச் சிந்தனையுள்ள கட்சிகளும் கைகோர்த்துள்ளனவெனவும் கூறினார்.

எனவே, சிறுபான்மை மக்களாகிய நீங்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை இப்போதே தீர்மானித்திருப்பீர்களெனத் தெரிவித்த அவர், இந்தப் பெருந்திரளான கூட்டம் அதற்குச் சான்றும் பகர்கின்றதெனவும் கூறினார்.

இறைவனின் நாட்டமின்றி எதுவுமே நடக்கப்போவதில்லையெனத் தெரிவித்த ரிஷாட், மக்கள் காங்கிரஸைப் பொறுத்தவரையில், பிரிந்த இனங்களையும் பிரிந்த உள்ளங்களையும் ஒன்றிணைத்த கட்சி. சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, சமாதானப் பாலத்தை அமைத்து பயணிக்கும் கட்சியெனவும் கூறினார்.

"தமது இருபது வருட கால அரசியலில், நல்ல பணிகளை செய்திருக்கின்றோம். நேர் எதிரியானவர்களுக்குக் கூட அவர்களின் திறமைகளுக்கு முன்னுரிமை வழங்கி, சமூக அந்தஸ்துள்ளவர்களாக மாற்றியுள்ளோம்" என்றும், அவர் கூறினார்.

# மஹிந்த தேசப்பிரிய பதவியை துறக்கிறார்?



அப்பதவியிலிருந்து அவர், விலகுவதற்கு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தேர்தல் பணிகளில் 37 வருடங்களாகப் பணியாற்றிய தான், தனிப்பட்ட காரணங்களால், முன்கூட்டியே பதவி விலகத் தீர்மானித்துள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2020 நவம்பர் 13ஆம் திகதி முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# 'முக்கியத் தேர்தல்'

யாழ்ப்பாணம் - வடமராட்சி, மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில், நேற்று முன்தினம் (01) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், "இந்த நாடாளுமன்றத் தேர்தல் அதி முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகக் கருதப்படுகிறதெனவும் அதற்குக் காரணம் என்னவென்றால், இந்த நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட பிறகு அல்லது நாடாளுமன்றம் கூடிய பிறகு, ஒரு முக்கிய அரசியல் சாசனம் முன்வைக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது" என்றார்.

"அரசியல் சாசனம் எதுவும் எமது மக்களுடைய சம்மதத்துடன் மக்களுடைய இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனம் அல்லவெனத் தெரிவித்த அவர், "அரசியல் சாசனம் புதிதாக உருவாக்குவதற்கு விசேடமாக மூன்று விடயங்கள் சம்பந்தமாக அதாவது முதலாவது ஜனாதிபதி ஆட்சிமுறை, இரண்டாவது நாடாளுமன்ற தேர்தல் முறை, மூன்றாவதாக தேசிய பிரச்சினை. அதாவது, தமிழ் மக்களுடைய அதிகாரம் சம்பந்தமான கோரிக்கை" எனவும் கூறினார்.

தாங்கள் 13ஆவது அரசியல் சாசனத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லையெனத் தெரிவித்த சம்பந்தன், அதில் பல குறைகள் இருந்ததாலேயே, அதை ஏற்றுக்கொள்ளவில்லையெனவும் கூறினார்.

"எங்களது அதிகாரத்தை நாங்கள் பெற வேண்டும். ஒரு மக்கள் குழாமுக்கு தனி தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது. அது மறுக்கப்பட்டால் அவர்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமை உள்ளது.

"ஆகையால், இந்தச் சவால்களை எதிர்நோக்க வேண்டிய தமிழ்க் கட்சியொன்று, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியது அத்தியாவசியம்" எனவும், அவர் கூறினார்.

# ரணிலிடம் சஜித் விசேட கோரிக்கை

மூன்றாவது தரப்பின் ஊடாகவே, இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளதெனவும் அதற்கு, ரணில் விக்கிரமசிங்க, சாதகமான பதிலொன்றை அளித்துள்ளாரென்னும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு, கௌரவமளிக்கும் வகையிலேயே, கட்சியிலிருந்து உறுப்பினர்களை வெளியேற்றுவதைத் தாமதப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளாரென அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த, ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் அடங்கலாக, 150 பேர், கட்சி செயற்குழுவின் தீர்மானத்துக்கு அமைய, வெளியேற்றப்பட்டனர்.

> சஜித் பிரேமதாஸவின் கோரிக்கையை அடுத்து, செயற்குழுவின் கூட்டமும் பிற்போடப்பட்டுள்ளதென அறியமுடிகின்றது

உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் இன்னும் 200 பேரை, கட்சியிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, ஐ.தே.க அறிவித்துள்ளது. இந்நிலையிலேயே சஜித் பிரேமதாஸவால் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சஜித் பிரேமதாஸ, லக்ஷ்மன் கிரியெல்ல, ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாசீம், கயந்த கருணாதிலக்க ஆகியோர் தொடர்பில், ஐ.தே. கவின் செயற்குழுவினால், தீர்மானமொன்று இவ்வாரம் எட்டப்படவிருந்தது. எனினும், சஜித் பிரேமதாஸவின் கோரிக்கையை அடுத்து, செயற்குழுவின் கூட்டமும் பிற்போடப்பட்டுள்ளதென அறியமுடிகின்றது.

# ஷானிக்கு வருத்தம்

பாதுகாப்புக்கு மத்தியில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக, சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தச் சிறைச்சாலை வாட்டில், நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் பிரதான சிறை அதிகாரி சரத் பண்டார, பொலிஸ் அதிகாரிகள் இருவர் உள்ளிட்ட 22 பேரடங்கியோர் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட சந்தேகநபர்கள் ஏழு பேருக்கு எதிராக, அடக்குமுறை ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ், தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், பிரதான சந்தேகநபரான குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் பொலிஸ் அதிகாரி ஷானி அபேசேகர, அடக்குமுறை ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பில் சாட்சியை மறைத்த குற்றச்சாட்டின் கீழ், மாத்தறையிலுள்ள அவரது வீட்டில் வைத்து, ஒகஸ்ட் 31ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'அச்சம் வேண்டாம்'

தேர்தல் பிரசாரம், நேற்று (02) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்துவிட்டது. அதற்குப் பின்னர் எந்தவகையிலும் பிரசாரங்களை முன்னெடுக்கமுடியாது. வீட்டுக்கு வீடு செல்லவும் முடியாது எனத் தெரிவித்த அவர், தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக, நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு பணிக்கப்பட்டது என்றார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகைதரும்போது, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டுமென ஆலோசனைகளை வழங்கியுள்ள அவர், அச்சமின்றி வாக்களிக்க வருமாறு, வாக்காளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, இதுவரையிலும் தேர்தல் சட்டங்களை மீறிய முறைப்பாடுகள், 6,483 கிடைத்துள்ளனவென, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.



# 3 வாக்குகளுக்கு ஒரு பெட்டி

இந்தத் தீவிலுள்ள தொழுநோயாளர் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் மூன்று நோயாளர்களுக்கே ஒரு வாக்குப்பெட்டி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலை, பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது. அங்கு, 200 பேர் வரை தங்கியிருந்து, சிகிச்சை பெறக்கூடிய வசதிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஊழியர்கள் தங்கியிருக்கும் விடுதிகள், வணக்க ஸ்தலங்கள் என பலவசதிகளும் உள்ளன.

இறுதியாக அங்கு, 13 பேர் சிகிச்சை பெற்று வந்தனர். மாந்தீவில் 2009ஆம் ஆண்டு, ஏற்பட்ட பாரிய தீ அனர்த்தத்துக்குப் பின்னர், சரியான பராமரிப்பு இன்மையால், மூவரைத் தவிர அனைவரும் சென்றுவிட்டனர். அவர்கள் மூவரும், மட்டக்களப்புத் தேர்தல் தொகுதியின் கீழ், வாக்காளர்களாகப் பதியப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான, வாக்குப்பெட்டி இயந்திரப் படகு மூலம், மாந்தீவு வாக்கெடுப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்வதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி திருமதி கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

> அங்கு, 200 பேர் வரை தங்கியிருந்து, சிகிச்சை பெறக்கூடிய வசதிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது

மூன்று வாக்களர்களுக்கும் பொதுவான நியமங்களே கடைப்பிடிக்கப்படுமெனத் தெரிவித்த அவர், அவர்கள் 7 மணிமுதல் 5 மணிவரை வாக்களிக்கலாம் என்றார்.

(க.சரவணன், ஏ.எச்.ஏ. ஹுஸைன், பேரின்பராஜா சபேஷ், க. விஜயரெத்தினம்)

# பௌத்த மத கொடி வர்ணங்கள் கம்பங்களில் தீட்டப்பட்டுள்ளன

பௌத்த மதம் சம்பந்தமான எதையும் மனிதன் உடுத்தக் கூடாது; பச்சை குத்த கூடாது. என்ன கொடுமை சித்தார்த்தரே" என்றும் பதிவொன்று இடப்பட்டுள்ளது.

மின்கம்பங்களில் பௌத்த மதக் கொடியை வர்ணம் தீட்டுவதற்கு அனுமதியளித்தது யார், யாருடைய உத்தரவின் கீழ், இவ்வாறு வர்ணம் தீட்டப்பட்டுள்ளது என்பது தொடர்பில், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு, பௌத்த மத விவகாரத் திணைக்களத்துக்கு நேற்று (02) தொடர்பு கொள்ள முயற்சித்த போதிலும், ஞாயிற்றுக்கிழமை என்பதால், அம்முயற்சி கைகூடவில்லை.

# ஆற்றை ஆழப்படுத்தல் தடுத்து நிறுத்தம்

முல்லைத்தீவுக்கு கடந்தவாரம் விஜயம் செய்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட்டுவாகல் நந்திக்கடல், தேர்தலுக்கு முன்னர் ஆழப்படுத்தப்படுமென கடற்றொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்தார்.

அந்த வாக்குறுதியின் அடிப்படையில், வட்டுவாகல் ஆற்றில் கனரக இயந்திரம் நேற்று (02) இறக்கப்பட்டு தோண்டப்பட்டது. சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து, அங்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள், ஆழப்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்துமாறு பணித்தனர்.

ஆற்றை ஆழப்படுத்தும் செயற்பாடுகள், நாரா நிறுவனத்தின் ஊடாக முன்னெடுப்பதற்கு, அமைச்சரவையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான செயற்பாடுகள், நேற்று (02) ஆரம்பிக்கப்பட்டபோதே, தேர்தல் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு மீனவர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். எனினும், அவ்விடத்திலிருந்த முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் க. காண்டீபன், "தேர்தல் காலங்களில் பணிகளை முன்னெடுக்க முடியாது. ஒகஸ்ட் 7ஆம் திகதிக்குப் பின்னர், அந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கலாம்" என மீனவர்களிடம் தெரிவித்தார்.

# இன்று கூடுகிறது அரசமைப்பு பேரவை

ஆகியவற்றில் காணப்படும் வெற்றிடங்கள், இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் காணப்படும் வெற்றிடங்கள் ஆகியவற்றை நிரப்புவது தொடர்பில் கலந்துரையாடப்படும்" என, அரசமைப்பு பேரவையின் செயலாளரும், நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

"நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, தேசிய கொள்வனவு ஆணைக்குழு ஆகியவற்றால் முன்வைக்கப்பட்டுள்ள காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், இதன்போது மதிப்பீடு செய்யப்படவுள்ளன" என்றார்.

# கழுத்துக்குப் பின் பூனை சிக்கியது

கொழும்பு- வெலிகடை சிறைச்சாலையின் முன்பாக, அங்குமிங்கும் பூனையொன்று உலாவித் திரிந்துள்ளது. அதனை, மிகவும் இலாவகமாகப் பிடித்த சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், அதனை சோதனைக்கு உட்படுத்திய போதே, விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அந்தப் பூனையின் கழுத்தில், சிறிய பொதியொன்று கட்டப்பட்டு இருந்துள்ளது. அதற்குள், 1 கிராம் 7 மில்லி கிராம் ஹெரோய்ன், சிம் அட்டைகள் இரண்டு, மெமரி அட்டையொன்று ஆகியன இருந்துள்ளன.

சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய, பிடிக்கப்பட்ட அந்தப் பூனை குறித்த மேலதிக விசாரணைகளுக்காக, பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகள், முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவென பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பாதாளக் குழுவின் தலைவரான அங்கொட லொக்காவால் போதைப்பொருள்களை விநியோகிப்பதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படும், கழுகொன்றும் மீகொட- நாவலமுல்ல, மயான வீதியிலுள்ள விலங்குப் பண்ணையொன்றிலிருந்து ஜூலை 30ஆம் திகதியன்று, அத்துருகிரிய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் கொவிட்-19 முதல் குழந்தை பிரசவம்

அங்கு, அப்பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில், கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதையடுத்து, கொரோனா வைரஸ் தொற்று உள்ளாகியிருக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, விசேடமாக நிறுவப்பட்டுள்ள கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் விசேட பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

அந்தப் பிரிவில் ஜூலை 23ஆம் திகதியன்று அனுமதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு, நேற்றுமுன்தினம் (01) பிரசவவலி ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து, அப்பெண்ணிடமிருந்து கொரோனா வைரஸ், வெளிப்புற சூழலுக்குள் நுழைவதைத் தடுக்க, மருத்துவர்கள், தாதியர்கள் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது.

மருத்துவர்கள், தாதியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 35 பேரைக் கொண்ட விசேட குழுவால், அப்பெண்ணுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நுண்ணுயிரியல் வைத்தியர்களும் இதில், ஈடுபட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

பிறந்த சிசு ஆரோக்கியமாக இருந்தபோதிலும், சிசுவின் உயிரியல் மாதிரிகள், கொவிட்-19 பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. அதில், சிசுவுக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருக்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்தியர்கள் தெரிவித்தனர்.



## நிறைவுக்கு வந்த பணிப்புறக்கணிப்பு

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டுக்கு வழங்க வேண்டாமெனத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பை, நிறைவுக்குக் கொண்டுவரவுள்ளதாக, துறைமுக தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்குமிடையில், தங்காலை- கால்டன் இல்லத்தில் நேற்று (2) நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் சாதகமான திர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டதையடுத்தே, தொழிற்சங்க நடவடிக்கையை நிறைவுக்குக் கொண்டுவர தீர்மானித்ததாகவும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

**“ கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, 23 துறைமுக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து 29ஆம் திகதியிலிருந்து தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது**

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பான பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, 23 துறைமுக தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து 29ஆம் திகதியிலிருந்து தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பில் கவனமெடுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, 23 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை, நேற்று (2) கலந்துரையாடலுக்கு அழைத்திருந்தார்.

இதன்போது கிழக்கு முனையத்தின் பெறுமதியை பிரதமர் ஏற்றுக்கொண்டதுடன், அதனை தனியார் மயப்படுத்தும் அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதியளிக்கப் போவதில்லை என வழங்கிய உறுதிமொழியையடுத்தே, தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிட தீர்மானித்துள்ளதாக, ஸ்ரீ லங்கா துறைமுக அதிகாரசபையின் உப தலைவர் டபிள்யு. எஸ். வீரமன் தெரிவித்துள்ளார். இதேவேளை துறைமுக பணியாளர்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையால், துறைமுக அதிகாரசபைக்கு 500 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக, ஸ்ரீ லங்கா துறைமுக அதிகாரசபையின் உப தலைவர் டபிள்யு. எஸ்.வீரமன் தெரிவித்துள்ளார்.

சாதாரணமாக நாளாந்தம் துறைமுகத்துக்கு 120 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துவந்த நிலையில், கடந்த 3 நாள்களாக இந்த வருமானம் இழக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் வேறு தாமதக் கட்டணங்களைச் செலுத்துதல் உள்ளிட்ட பிரச்சினைகளின் போது, மக்கள் முகம் கொடுக்க வேண்டிய சகல அசௌகரியங்களையும் நீக்கி, அத்தனை நட்டங்களையும் துறைமுக அதிகாரசபை எதிர்கொள்ள தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், கொழும்பு துறைமுகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் நேற்று (2) ஆரம்பிக்கப்பட்டதாகவும் இன்றைய தினம் (3) அனைத்து செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்புமென அவர் தெரிவித்துள்ளார்.

நான்கு பாரிய நகரத் திட்டங்களில்

## ‘ஹம்பாந்தோட்டை மாவட்டமும் உள்ளடக்கம்’

சர்வதேச தொடர்பு மத்திய நிலையமாக அபிவிருத்திச்செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள “நான்கு பாரிய நகர” திட்டத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தையும் இணைப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

நான்கு பாரிய வர்த்தக நகரத் திட்டத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் ஏனைய மாவட்டங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, நான்கு பாரிய நகரங்களில் துறைமுகம், விமான நிலையத்தை மய்யப்படுத்திய சி வடிவம் கொண்ட பொருளாதாரக் கொரிடோவை நிர்மாணித்து, சர்வதேச வியாபாரத்துடன் போட்டியிடும் நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து, ஹம்பாந்தோட்டையில் நேற்று (02) நடைபெற்ற பல்வேறு மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குடிநீர் பிரச்சினை, காட்டு யானை அச்சுறுத்தல்களுக்கு தீர்வாக முறையான, திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளப்போவதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளதோடு, ஹம்பாந்தோட்டை மஹனாகபுர, லுனுகம்வெஹெர மகா வித்தியாலயங்களில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

இதேவேளை போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்குமாறு இதன்போது மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

மஞ்சள் தூளில் கலப்படம்;

## பரிசோதனைகள் ஆரம்பம்

மஞ்சள் தூளில் கலப்படம் செய்யப்படுவதாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளையடுத்து, சந்தைகளில் உள்ள மஞ்சள் தூளின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மஞ்சளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், மஞ்சள் தூளில் வர்ணங்கள், மா வகைகள் கலந்து விற்பனை செய்யப்படுவதாக, நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து நாடு முழுவதிலிருமிருந்து சேகரிக்கப்பட்ட 15 மஞ்சள் தூள் மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவென, நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் அதிக விலையில் மஞ்சளை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்த அதிகாரசபை அறிவித்துள்ளதோடு, அதிக விலைக்கு மஞ்சளை விற்பனை செய்த 70க்கும் அதிகமானோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் தெரிவித்தது.

## கல்கிஸ்ஸையில் துப்பாக்கிகள் மீட்பு

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, இதிகஹதெனிய பிரதேசத்திலுள்ள கால்வாய்க்கு அருகிலிருந்து 4 துப்பாக்கிளும் 8 மெகசின்களும் கைப்பற்றப்பட்டுள்ளனவென, கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, நேற்று (2) காலை 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, இந்த துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

2/3 பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்ட

## சகல அரசாங்கங்களும் நாட்டின் அழிவுக்கே வித்திட்டன

தற்போதைய ஆளும் தரப்பினர் 2/3 அதிகாரத்தை கோரி வளம் வருகின்றனர் எனத் தெரிவிக்கும் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அவ்வாறான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட சகல அரசாங்கங்களும் நாட்டை அழிவுப் பாதைக்கே இட்டுச் சென்றன என்றார்.

தற்போதைய ஆளும் தரப்பினருக்கு நாட்டு மக்களின் உயிர்ப்பாதுகாப்பை விடவும், குடும்ப ஆட்சியே முக்கியமாக தெரிகின்றதெனவும், கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக நிர்க்கதி நிலைக்குள் உள்ளாகியிருக்கும் மக்களின் நிலைமை தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த தவறியுள்ளதெனவும் தெரிவித்தார்.

ஆட்சியாளர்களுக்கு மக்களின் உயிர் பாதுகாப்பு அவசியம் இல்லை என்பதாலேயே தேர்தலை நடத்துவதில் மும்முரமாக உள்ளனர் எனவும்,தேர்தர் ஆணைக்குழுவும் நாட்டு மக்களைப் பற்றிச் சிந்திக்கத் தவறியிருந்தால் பெரும் அழிவு ஏற்பட்டிருக்குமெனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் சுயரூபம் வெளிப்படும் முன்பாக தேர்தலை நடத்திவிட வேண்டும் என்பதே ஆளும் தரப்பின் முக்கிய நோக்கமாக இருந்தாகவும், அதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானம் தடையாக அமைந்துவிட்டதால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மீது சேறுபூச ஆரம்பித்தனர் எனவும் சாடினார்.

அதேபோல், 2/3 கனவுடன் தேர்தலை நடத்தும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த 8 மாதங்களில் எந்தவொரு நல்ல திட்டத்தை முன்னெடுக்க வில்லை என்பதோடு, இன்றும் அது தொடர்பாக ஆளும் தரப்பின் தேர்தல் மேடைகளில் பேசப்படுவதில்லை என்பதுடன், ரணில், சஜித்துடைய மேடைகளிலும் மக்கள் பிரச்சினைகள் பற்றி பேசப்படுவதில்லை என்றார்.

2/3 பெரும்பான்மையை பெற்றுக்கொண்ட சகல அரசாங்கங்களுமே தொழிலாளர்களை வெளியேற்றுவதை மாத்திரமே செய்ததெனவும், 1981 களில் யாழ்ப்பாண நூலகத்துக்கு தீமூட்டியிட்டு புலிகளின் தோற்றத்துக்கான சூழலையும் ஆட்சியாளர்களே உருவாக்கியிருந்தனரெனவும் தெரிவித்தார்.



அதுபோலவே 1983 களில் கறுப்பு ஜூலை கலவரத்தை தோற்றுவித்தனர் எனத் தெரிவித்த அவர், அதனாலேயே பிரகாரன் தற்கொலை குண்டுதாரிகளை உருவாக்கியிருந்தாகவும் சாடினார்.

களுத்துறை சிறைச்சாலையில்

## மூவர் தப்பியோட்டம்

### ஒருவர் சிக்கினார்

களுத்துறை சிறைச்சாலையில் கைதிகள் மூவர், நேற்று (02) அதிகாலை தப்பியோடியிருந்த நிலையில், அவர்களில் ஒருவரை நேற்று மதியமே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர் எனவும் தப்பிச்சென்ற கைதிகள்




மூவரும் மக்கொன, கல்பாத, களுத்துறை தெற்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இரு கைதிகளைத் தேடி சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெலியத்த துப்பாக்கிச்சூட்டில்

## பெண்ணொருவர் பலி

பெலியத்த - தம்முல்ல பகுதியில், வீடொன்றுக்கு முன்பாக நேற்று (2) முற்பகல் 10 மணயளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில், பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்முல்ல - வீரகெட்டிய வீதியைச் சேர்ந்த 52 வயதான பெண்ணொருவரே துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார்.

**“ சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்**

சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்றும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

**விற்பனைக்கு**

தெஹிவளையில் 2 படுக்கையறைகளுடன், குளியலறை, சாலை, பெல்கனி, வாகன தரிப்பிடமொன்றைக் கொண்ட முழுமையாக டையில் பதிக்கப்பட்ட வீடு விற்பனைக்கு உள்ளது. தொடர்புகளுக்கு 0766237690

**விற்பனைக்கு**

நுகேகொடையிலுள்ள வீடொன்றுக்கு அனுபவமுள்ள வீட்டுப் பணியாள் ஒருவர் அல்லது, தம்பதிகள் அவசியம் தொடர்புகளுக்கு 0777722388

தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறும் வேட்பாளர்களுக்கு

## ‘ஏழு வருடங்களுக்கு அரசியல் தடைவிதிக்க வேண்டும்’

எந்தவோர் அரசியல்கட்சியைச் சேர்ந்த வேட்பாளரும் தேர்தல் சட்டதிட்டங்களை மதிப்பதில்லை எனத் தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல், தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வேட்பாளர்கள் நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக நிருபிக்கப்பட்டால், அவருக்கு வழங்கப்படும் தண்டனைகளுக்கு மேலதிகமாக 7 வருடங்களுக்கு அரசியல்தடை விதிக்க வேண்டும் என்றார்.

தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, பதுளை தேர்தல் அலுவலகத்துக்கு, நேற்று (2) சென்றபோதே, ஹூல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இந்திக அத்துருசிங்க உள்ளிட்டவர்கள், பதுளை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தாலும் இந்தப் பிரதேசத்தில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரும் தேர்தல் சட்டதிட்டங்களைப் பின்பற்றி, தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளார்.

“அத்துடன் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கும்போது பொலிஸார் அந்த முறைப்பாடுகளை விசாரிக்கச் சென்று, சம்பந்தப்பட்டவர்களை எச்சரித்துவிட்டு வருகின்றனர். இதை அரசியல்வாதிகள் விளையாட்டாக எடுத்துக்கொள்கின்றனர்” என்றார்.



“பொலிஸார் சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தாமை காரணத்தால் தான், அரசியல்வாதிகள் தேர்தல் சட்டதிட்டங்களை மீறுகின்றனர். எனவே சட்டம் உரியமுறையில் செயற்படுத்தப்புடுமானால், எந்தவோர் அரசியல்வாதியும் சட்டதிட்டங்களை மீறமாட்டார்கள்” எனத் தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு

## கழிவுத் தேயிலை கொள்கலன் சுங்கத்தில் சிக்கியது

ஈராக்குக்கு அனுப்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மற்றுமொரு கழிவுத் தேயிலை அடங்கிய கொள்கலன் ஒன்று, சுங்கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கறுவா ஏற்றுமதி செய்வதாகத் தெரிவித்து, 17ஆம் திகதி இந்தக் கொள்கலன் ஏற்றுமதி செய்ய தயார் செய்யப்பட்டதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் கழிவுத் தேயிலை கொள்கலனுடன் தொடர்புடைய சந்தேகநபரை ஒகஸ்ட் 4ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சுங்கப் பிரிவினரால் உறுதிப்படுப்பட்டுள்ள தகவல்களுக்கமைய, இதுவரை 252 கழிவுத் தேயிலை அடங்கிய கொள்கலன்கள் ஈராக்குக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனுடன் தொடர்புடைய 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுங்கப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

**ஆறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிறிவு 244 (3) விதிகளின் கீழ் சிப்லா பார்மா லங்கா (பிரைவட்) லிமிட்டட் P V 100158 மற்றும் பிரீத்பிறீ லங்கா (பிரைவட்) லிமிட்டட் P V 99128 ஆகியன ஒருங்கிணைக்கப்பட்டமையை இத்தால் அறியத்தருகின்றோம்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர்:
**பிரீத்பிறீ லங்கா (பிரைவட்) லிமிட்டட**
திகதி : **01.05.2020**
**கம்பனி செயலாளர்கள்.**
**கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**

**அட்டர்னி அதிகார ஆவணம் ரத்து செய்தல்**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின், 30/5, யோத மாவத்தை, சித்தமுல்லை, பிலியந்தலையில் வசிக்கும், 455783313 V தேசிய அடையாள அட்டை இலக்கத்தை கொண்ட குடலிகமகே விஜயலத்தா ஆகிய நான், அட்டர்னி ஆவண அதிகாரம் பெற்றவராக நியமிக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பு 05, உத்யான புர, இல. 200/22 இல் வசிக்கும் N 2892864 இலக்க, இலங்கை கடவுச்சிட்டை கொண்ட குடலிகமகே கீதாஞ்சன என்கின்ற எனது சகோதரரின் மூலம் Altona Jessie-Mae Bell அமெரிக்காவின் வுட் ப்ரிட்ஜின் பிரபல்யமான நொத்தாரிசினால் 2020 பிப்ரவரி 12ஆம் திகிதி உறுதிப்படுத்தப்பட்ட விஷேட அட்டர்னி அதிகார ஆவணத்தில், அட்டர்னி உரிமையாளராகிய குடலிகமகே கீதாஞ்சனவின் விருப்பத்தின் படி 2020 ஜூலை மாதம் 20ம் திகதி முதல் அட்டர்னி ஆவண பத்திரம் ரத்து செய்யப்படும். அத்தினத்திலிருந்து அட்டர்னி ஆவண பத்திரமோ அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட எந்த நடவடிக்கையோ செல்லுபடியாகாது என இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

**குடலிகமகே விஜயலத்தா**

கம்பனியின் புதிய பெயர்:
**மாராஜா (பிறைவட்) லிமிடட்**
கம்பனியின் பெயர்:
**மாராஜா புட்ஸ் (பிறைவட்) லிமிடட்**
பதிவு செய்த இல.: **PV 89705**
பதிவு செய்யப்பட்ட முகவரி: **இல. 18/3, டொக்டர் ஈ.ஏ.குரே மாவத்தை, கொழும்பு – 06.**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**16 பெப்ரவரி 2017**

கம்பனியின் பெயர்:
**பெஸ்ட் கொன் (பிறைவட்) லிமிடட்**
பதிவு செய்த இல.: **PV 105764**
பதிவு செய்யப்பட்ட முகவரி:
**இல. 23, முகலன் வீதி, கிருலப்பனை, கொழும்பு – 06.**
கூட்டிணைக்கப்பட்ட திகதி: **21 மே 2015**

கம்பனியின் பெயர்:
**ஐடியல் எஞ்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட்**
பதிவு செய்த இல.: **PV 63776**
பதிவு செய்யப்பட்ட முகவரி: **இல. 208 – 1/1, விரேசர் எவன்யு, தெஹிவலை.**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**08 ஏப்ரல் 2008**

கம்பனியின் பெயர்:
**பைன் எலுமினியம் (பிறைவட்) லிமிடட்**
பதிவு செய்த இல.: **PV 106355**
பதிவு செய்யப்பட்ட முகவரி: **இல. 34/3பி, ரோஹினி வீதி, கொழும்பு – 06.**
கூட்டிணைக்கப்பட்ட திகதி: **17 ஜூன் 2015**

**த கோபரேட் லெஜன்ட் (பீவீட) எல்டீடி**
**(PV 101437)**
**கம்பனி செயலாளர்கள்**

வாக்குப் பெட்டிகளைப் பாதுகாப்பதற்கு

# ‘விசேட நடவடிக்கை’

கொரோனா தொற்று காரணமாக, இம்முறை வாக்கு எண்ணும் நடவடிக்கை 6ஆம் திகதி ஆரம்பமாவதால், வாக்குப் பெட்டிகளின் பாதுகாப்புத் தொடர்பில் விசேட நடவடிக்கை பல முன்னெடுக்கப்பட்டுள்ளதென, தேர்தல் ஆணைகுழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

விசேடமாக வாக்குகள் எண்ணும் மத்தியநிலையங்களுக்கு தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேட்சைக் கட்சிகளின் பிரதிநிதிகள் தலா இருவரே வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு அனுமதிக்கப்படுவதுடன், அவர்கள் இரவு நேரத்தில் மத்திய நிலையங்களில் தங்கியிருக்க முடியும். வாக்கு எண்ணும் மத்திய நிலையம் வெளியில் தெரியாத வகையில், முன்பைப் போலவே கறுப்பு நிற பேப்பரால் மறைக்கப்படாதென்றும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்குகள் அடங்கிய பெட்டிகள், வாக்கு எண்ணும் மத்திய நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, எண்ணும் அதிகாரியிடம் ஒப்படைத்த பின்னர், மற்றுமொரு பாரிய பெட்டிக்குள் இட்டு சீல் வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வாக்கு எண்ணும் மத்திய நிலையத்துக்கு கொண்டு செல்லப்படும் சிறிய பெட்டிகளும்



அவற்றை உள்ளடக்கும் பெரிய பெட்டிகளுக்கும் கட்சி மற்றும் சுயாதீன குழு பிரதிநிதிகள் தங்கள் கட்சிக்கு தனித்துவமான எந்தவொரு ஸ்டிக்கர் அல்லது கையொப்பம் கொண்ட வெள்ளை காகிதத்தையும் ஒட்டுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

இரவு நேரங்களில் ஒட்டப்படும் இந்த ஸ்டிக்கர்கள் அல்லது அடையாளங்கள் மறுநாள் காலையில் அவ்வாறே உள்ளனவா என்று அவர்களால் பரீட்சித்துக்கொள்ளலாம்.

இந்தப் பெட்டிகளில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் இலட்சினை, பிரிதிநிதிகளின் படங்கள் உள்ளிட்டவை இருக்கக் கூடாது என்றார்.

அதேபோல் வாக்குப் பெட்டியில் வாக்குச் சீட்டுகளை இடுவதற்கு முன்னர், வாக்குப் பெட்டி வெறுமையாக உள்ளதை உறுதிப்படுத்தியதன் பின்னர், அதனை பூட்டால் பூட்டி, பெட்டியில் உள்ள துளைகள் வழியாக சிவப்பு நிற பட்டியால் கட்டுவதாகவும், வாக்குகள் அளித்து நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், அந்தப் பெட்டி, சீல் வைக்கப்படும் என்றார்.

பின்னர் வாக்களிப்பு மத்திய நிலையங்களில் உள்ள சிரேஷ்ட அதிகாரி அல்லது ஏனைய அதிகாரிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் கையொப்பத்துடன் வாக்குச்சீட்டுகள் அடங்கிய பெட்டி பொலித்தின் பெட்டியொன்றில் இட்டு, இலக்கத்துடன் பிளாஸ்டிக் பையுடன் மீண்டும் சீல் வைக்கப்படும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாக்குப் பெட்டியை மாற்ற முடியாதென்றார்.

அதேபோல் வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களின் பாதுகாப்புக்காக தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரெனத் தெரிவித்த ஆணைக்குழுவின் தவிசாளர், அந்த இடத்துக்கு தீப்பெட்டி, மதுபானம் ஏனைய போதைப்பொருள்களைக் கொண்டு செல்வது தடைவிதிக்கப்பட்டுள்ளதென்றார்.

இரவு நேரத்தில் வாக்குப் பெட்டிக்குள் வேறு வாக்குச் சீட்டுகள் இடுதல், வாக்குப் பெட்டிகள் மாற்றப்படும் என மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள எண்ணத்தை எவ்விதத்திலும் மாற்ற முடியாதென்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

# சம்பாயோ கைது

நீர்கொழும்பு சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு, சொகுசு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த குற்றச்சாட்டில், பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி, அநுருத்த சம்பாயோ நேற்று (2) குருநாகல் பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யபபட்டவர், கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்ததுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, கடந்த 22ஆம் திகதி நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றின் பதில் நீதவான் உத்தரவிட்டிருந்த நிலையில், நீர்கொழும்பு பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவுக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய, சந்தேகநபர் குருநாகல் சென். அனா பாடசாலைக்கு அருகில் வைத்து, மாலை 3.35 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


நீர்கொழும்பு சிறையிலுள்ள கைதிகளுக்கு, சிறைச்சாலைக்குள் சொகுசு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த குற்றச்சாட்டுத் தொடர்பில், குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசேட விசாரணைப் பிரிவினர், நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஜூலை 21ஆம் திகதி அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

அத்துடன், நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி சம்பாயோ, சரத் பண்டார, நிஷாந்த சேனாரத்ன, காலிங்க களுஆராய்ச்சி ஆகியோர் இந்தச் சம்பவத்தின் சந்தேகநபர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டு, அவர்களைக் கைதுசெய்வதற்கான பிடியாணையைப் பிறப்பிக்குமாறு குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிமன்றில் கோரியிருந்தனர்.

பின்னர், இந்த வழக்கு, ஜூலை 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், பிரதான சந்தேகநபர் சம்பாயோவைத் தவிர ஏனைய சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் ஆஜர் ஆகியதையடுத்து, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு, நீர்கொழும்பு பதில் நீதவான் இந்திகா சில்வா உத்தரவிட்டார்.

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 10 நாள்கள் கடந்திருந்த நிலையில் சம்பாயோவைக் கைதுசெய்யப் பொலிஸாரால் முடியாது போயுள்ளதாக, பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ், சட்டமா அதிபர் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்கும் வகையில், இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, சம்பாயோ மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட்மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஐக்கிய மக்கள் சக்தியிடம்

# ‘நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல்’

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் ஐ.தே.கவுக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக 2 பில்லியன் நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேபோல், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ துரோகம் இழைத்துவிட்டாரென்றும், அவரை நம்பிச் சென்ற யானைகள் அநாதரவாகியுள்ளனவெனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம், நேற்று (02) மத்திய கொழும்பு தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு தொடர்ந்துரைத்த அவர்,

தேர்தல் காலத்தில், இனத்தையும் மதத்தையும் விற்பனை செய்வது, ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை இல்லையெனவும், மொட்டுக் கட்சியுடன் மாத்திரமே, இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு போட்டி எனவும் தெரிவித்தார்.

அதேபோல், சுதந்திரத்துக்குப் பின்னர், ஐந்து முறை நாட்டின் பொருளாதாரம் உடைந்து விழுந்தபோது, அதை ஐக்கிய தேசிய கட்சியே மீட்டெடுத்ததெனத் தெரிவித்த அவர், அதன் இறுதியான சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய கட்சியே தலைமை தாங்கியது என்றார்.

இன்று சில யானைகள், திசை மாறிச் சென்றுவிட்டனவெனத் தெரிவித்த அவர், அவர்கள் மைத்திரியின் ஆலோசனையைக் கேட்டு, வேலை செய்கின்றார்கள் எனவும் சாடினார்.

அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்காதவர்கள் இன்று ஐ.தே.கவில் கூடி வருவதாகவும் தெரிவித்தார்.

அதனால், மேற்படி அநாதரவாகியுள்ள யானைகள், அரசாங்கத்துடன் ‘டீல்’ இருப்பதாகக் கூறுவது, வேடிக்கையானதெனத் தெரிவித்த அவர், சஜித் தலைமையிலான அணியினர், ஐக்கிய தேசிய கட்சியின் ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக, வழக்கொன்றைத்தொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். அந்த வழக்கில் கிடைக்கும் 2,000 மில்லியன் ரூபாய்களையும் ஐக்கிய தேசிய கட்சியின் நிதியத்தில் சேர்ப்பதாகத் தெரிவித்த அவர், ரணில், ரவியின் மீது சேறு பூசிவிட்டுத் தேர்தலை வெல்வதற்கு, சஜித் அணி முயல்வதாகவும் சாடினார்.

மத்திய கலாசார நிதியத்தில், நிதி மாயமான விவகாரம் வெளிவந்த பின்னர், அதை மறைப்பதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தியினர், ஐக்கிய தேசிய கட்சியினரைச் சாடுவதாகவும், கொழும்பே வேண்டாம் எனக் கூறியவர், இன்று கொழும்பில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது வேடிக்கையானது என்றார்.

அதனால், ஐக்கிய தேசிய கட்சி, நாட்டின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு, இயலாமைகள் நிறைந்த தற்போதுள்ள அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு, நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



# சிறைச்சாலை வளாகத்தில் தோட்டாக்கள்

நீர்கொழும்பு சிறைச்சாலை வளாகத்தில் உள்ள சுவர் ஒன்றுக்கு அருகில் இருந்து, தோட்டாக்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகளால், நீர்கொழும்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார், சிறை அதிகாரியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்குப் பின்னால் உள்ள மூங்கில் புதரொன்றில் இருந்து, டீ-56 துப்பாக்கித் தோட்டாக்கள் 13 உள்ளிட்ட மேலும் சில துப்பாக்கித் தோட்டாக்களை மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில், நீர்கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகளும் நீர்கொழும்பு பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரமே

# ‘பிரிவினைவாதமில்லா நாட்டை உருவாக்க முடியும்’

“இலங்கையில் அனைத்து இனங்களுக்கும் ஒரே மாதிரியான அங்கிகாரத்தை வழங்கி, அவர்களுக்கான பிரதிநிதிகளை விகிதாசார அடிப்படையில் நியமித்த ஒரே தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே” என்று, அக்கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி வி.ஜனகன் தெரிவித்தார்.

சிறுபான்மையினர் என்று தமிழ் பேசும் மக்களைப் ஒதுக்கிவைக்க முனையும் பிரிவினைவாத கட்சிகளை விட சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியே நாளைய எதிர்காலத்தைச் சிறந்த முறையில் முன்னெடுத்து செல்லும் என்றும் அவர் உறுதியளித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களது வெற்றியை உறுதி செய்யும் மாபெரும் பொதுக்கூட்டம், நேற்று முன்தினம் (01) மாலை கொட்டாஞ்சேனையில் நடைபெற்றவேளை, அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, கலாநிதி வி.ஜனகன் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த மக்கள் சந்திப்பில் தொடர்ந்து உரையாற்றிய அவர், கலாநிதி வி.ஜனகன், “தமிழ் பேசும் மக்கள், பல விட்டுக்கொடுப்புகளுக்கு மத்தியில் இம்முறை பொதுத் தேர்தலை எதிர்நோக்கியுள்ளனர்” என்றார்.

“எனினும், தமிழ் பேசும் சமூகத்தின் ஆதரவு தேவையில்லை என்று ஒரு தரப்பு ஒதுக்கியும் இன்னொரு தரப்பு, பெயரளவில் பிரதிநிதிகளை நியமித்தும் உள்ள நிலையில், அனைத்து இனங்களுக்கும் ஒரே மாதிரியான அங்கிகாரத்தை வழங்கி, பிரதிநிதிகளை நியமித்த ஒரே தேசிய



கட்சி ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே.

“எனவே, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரம்தான் இந்த நாட்டைப் பிரிவினைவாதமில்லாத ஆட்சியின் கீழ் கொண்டு வர முடியும்.

“நாடாளுமன்றத் தேர்தல் என்பது, எமது சமூகத்தின் பிரச்சினைகளைத் தேடிப்பார்த்து நிவர்த்தி செய்யக் கூடிய தலைவர்களை விருப்பு வாக்குகளின் மூலம் தெரிவுசெய்யும் ஒரு நடைமுறையாகும்.

“தங்களின் சுயநல அரசியலுக்காக ஒரு சமூகத்தையே அசிங்கப்படுத்தும் பண்பை உருவாக்கியுள்ள மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர், ஒரு காலத்தில் தமிழர்களையும் வெறுக்கத்தக்க வகையில் நசுக்கும் செயற்பாட்டையே மேற்கொண்டிருந்தனர்.

“பல இடங்களில் தமிழ் பேசும் மக்களை கீழே போட்டு நசுக்கிவிட்டு,- இன்று நாட்டில் பிரிவினை வாதத்தைத் தூண்டுகின்ற மிகப் பெரிய சக்திகளாக மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் உருவெடுத்துள்ளனர்” என்றார்.



மலையகத்தில் நிர்மாணிக்கப்பட்ட

# 35,000 வீடுகளுக்கும் காணி உறுதி

அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட 35 ஆயிரம் வீடுகளுக்கு, அரசாங்கக் காணி உறுதிப்பத்திரம் வழங்குவது உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், செந்தில் தொண்டமான் முன்வைத்துள்ளார்.

பிரதமரின் இணைப்புச் செயலாளரும் பதுளை மாவட்ட வேட்பாளருமான செந்தில் தொண்டமானின் அழைப்பை ஏற்று, பசறைக்கு நேற்று முன்தினம் (01) வருகை தந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இதன்போதே, செந்தில் தொண்டமான் மூன்று கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளார்.

பெருந்தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு இதுவரை அரசாங்க காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும் எனவே, தேர்தலின் பின்னர் அமையப்போகின்ற அரசாங்கத்தின் ஊடாக, இந்த உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

> **“அது மாத்திரமன்றி ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ள ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளில், பதுளையிலுள்ள அங்கவீனமுற்றோர், மனநலம் பாதிக்கப்பட்டோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் செந்தில் தொண்டமானால் முன்வைக்கப்பட்டது**

அது மாத்திரமன்றி ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ள ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளில், பதுளையிலுள்ள அங்கவீனமுற்றோர், மனநலம் பாதிக்கப்பட்டோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் செந்தில் தொண்டமானால் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் அனைத்து தோட்டப் பிரிவுகளிலும் நவீன வசதிகளுடன் கூடிய வாசிகசாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற மூன்றாவது கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

# பதினொரு மில்லியன் ரூபாய் ஹெரோயினுடன் இருவர் கைது

பொரலஸ்கமுவ பொலிஸாரால், 11 மில்லியன் ரூபாயைவிட அதிகப் பெறுதியான ஹெரோயின் போதைப்பொருள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளில், பொரலஸ்கமுவ பொலிஸார் ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இந்த விசாரணைகளின்போது, கைது செய்யப்பட்ட நபரின் வங்கிக் கணக்குக்கு, தினமும் இலட்சக்கணக்கான பணம் வைப்பிலிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த இலட்சக்கணக்கான பணம், என்ன நோக்கங்களுக்காக வைப்பிலிடப்பட்டுள்ளது என்பது தொடர்பான விசாரணைகளில், ஒரு கிலோ நூறு கிராம் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள், 5 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான டான்ஸின் போதை வில்லைகளுடன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நபரின் மனைவியின் அலைபேசி வழியாகப் போதைப்பொருளை அவர்களுக்கு விநியோகிப்பவரை பெல்லன்வில விஹாரைக்கு அருகில் வரவழைத்த பொலிஸார், போதைப்பொருள் விநியோகிப்பவரையும் மடக்கிப் பிடித்துள்ளதோடு, அந்த நபர் பயன்படுத்திய சொகுசுக் கார் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

## தேர்தல் விதிமுறைகளை மீறுபவர்
# ‘வென்றாலும் பதவியிழப்பார்’

■ எம்.றொசாந்த்



வேலைவாய்ப்பை வழங்குவேன் என்று தேர்தல் விதிமுறைகளை மீறி வேட்பாளர் ஒருவர் செயற்படுவதாகத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன், அவர் வெற்றிபெற்றாலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பாரென்றும் எச்சரித்தார்.

தெல்லிப்பழை இராஜேஸ்வரி மண்டபத்தில், நேற்று முன்தினம் (01) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், வேலைவாய்ப்பு வழங்குவேன் என்று வேட்பாளர் ஒருவர், இளைஞர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்கிறாரெனவும் அவ்வாறு வேலைவாய்ப்பை வழங்க முடியாததெனவும், இவ்வாறான நடவடிக்கை, தேர்தல் விதிமுறை மீறலாகுமெனவும் கூறினார்.

அந்த வேட்பாளரால், பல தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் செய்யப்பட்டுள்ளனவெனத் தெரிவித்த அவர், அவை தொடர்பில் பல முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

எனினும், அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனரெனத் தெரிவித்த சுமந்திரன், எனவே, அவர் பல மாயாஜாலங்களைச் செய்து தேர்தலில் வெற்றிபெற்றாலும், நாடாளுமன்ற உறுப்புரிமையை இழப்பாரென்றும் கூறினார்.

# ‘கூட்டமைப்புடன் சேர்ந்து அரசாங்கம் வேலைசெய்யாது’

மஹிந்த - கோட்டாபய அரசாங்கம், ஒருபோதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து வேலை செய்யப் போவதில்லையெனத் தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், நாடாளுமன்றத்தில் தமக்குப் பெரும்பான்மை தேவைப்படக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் கூட, கூட்டமைப்பின் உதவியை அவர்கள் பெறமாட்டார்களெனவும் கூறினார்.

நாவற்குழி - கோவிலாக்கண்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தாமாக முன்வந்து பெரும்பான்மையைக் கொடுக்க முன்வந்தாலும், அரசாங்கம் அதனைப் பெறாதெனவும் ஏனென்றால், கடந்த பத்து ஆண்டுகளில் நடைபெற்ற அனைத்து ஜனாதிபதி தேர்தல்களிலும், ராஜபக்ஷவினருக்கு எதிராகவே கூட்டமைப்பு செயற்பட்டதெனவும் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வெளிச்சக்திகளோடு இணைந்து, எப்போதும் தமக்கு எதிராக வேலைசெய்பவர்கள் என்ற சந்தேகமும் கோபமுமே ராஜபக்ஷர்களுக்கு இருப்பதாகத் தெரிவித்த அவர், அவர்கள் ஒருபோதுமே கூட்டமைப்பினரை நம்பமாட்டார்களெனவும் கூறினார்.

இந்நிலையில், மஹிந்த - கோட்டா அரசாங்கத்துக்கு, நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்குவோம், அவர்களின் அமைச்சரவையில் இணைவோம் என்பதெல்லாம், வாக்கு வேட்டைக்காகத் தமிழரசுக் கட்சியினர் கூறும் ஏமாற்றுக் கதைகளெனவும், ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

“வடக்கு - கிழக்கை பொறுத்தவரை, ராஜபக்ஷ அரசாங்கத்தினரின் நம்பிக்கையையும் அதன் மூலம் பெற்ற அன்பையும் மரியாதையையும் பெற்ற ஒரே ஒருவர், டக்ளஸ் தேவானந்தா மட்டுமே ஆவார்.

“தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை, டக்ளஸ் கேட்பவற்றை மட்டும் அவர்கள் மறுக்காமலும் மறுக்க முடியாமலும் செய்வார்கள்” எனவும், அவர் தெரிவித்தார்.

## சுதந்திரமான தேர்தல் நடைபெற வேண்டுமாயின்
# ‘இராணுவத்தினர் முகாம்களுக்கு செல்ல வேண்டும்’

■ க. அகரன்

திங்கட்கிழமை (03) நள்ளிரவு 12 மணியுடன், இராணுவத்தினர் முகாம்களுக்குச் செல்லவில்லையாயின், சுதந்திரமான தேர்தல் இடம்பெறாதென, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியா விருந்தினர் விடுதியில், நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், கோட்டாபய ராஜபக்ஷ அவசர அவசரமாக இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, நாடாளுமன்ற சட்ட ஆட்சியை உருக்குலைத்தமையால், இந்த அராஜக ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டிய நிலை வந்துவிட்டதென்றார்.



இந்தத் தேர்தல் முடிந்த பின்னர், நாடாளுமன்றத்தில் பிரச்சினையொன்று வெளிவரவுள்ளதாகத் தெரிவித்த சிவமோகன், இதுவரை காலமும் தனது ஜனாதிபதி அதிகாரத்தை வைத்துக்கொண்டு நடத்தி வந்த அராஜக ஆட்சிக்கு எதிராக நாடாளுமன்றம் குரல் கொடுக்குமெனவும் இதன்போது, பாரிய முரண்பாடுகளை ஜனாதிபதி சந்திக்க வேண்டி வருமெனவும் கூறினார்.

“ஒகஸ்ட் 5இல் ஜனநாயக தேர்தல் நடைபெறவுள்ளதென்றால், திங்கட்கிழமை (03) நள்ளிரவுடன் அனைவரும் தேர்தல் பிரசாரத்தை முடிவுறுத்தி அனைவரும் சாதாரண நிலைக்குச் செல்ல வேண்டுமென்று, தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

“எனவே, அது நடைபெற வேண்டுமாக இருந்தால், திங்கட்கிழமை 12 மணியுடன் இராணுவத்தினர் அவர்களது முகாம்களில் அடைக்கப்பட வேண்டும். அவ்வாறு நடக்காதவிடத்து, சுதந்திரமான தேர்தல் நடைபெறாது” எனவும், அவர் கூறினார்.

# ‘தொல்பொருள் என்ற கோணத்தில் காணி அபகரிப்பு’

■ க. அகரன்

வன்னியில், தொல்பொருள் உள்ள இடம் என்ற போர்வையில், மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன எனச் சாடிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சிவபாதம் கஜேந்திரன், இதனால், தமது பூர்வீகக் காணிகளில், தமிழ் மக்கள் குடியேறமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

வவுனியா - திருநாவற்குளத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தமிழ்த் தேசிய அரசியலைப் பாதுகாப்பதற்கும் நில உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வன்னி மாவட்ட மக்கள் வாக்களிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளதென்றார்.

கடந்த காலங்களில், தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள், அந்தக் கொள்கைகளில் இருந்து விலகி, அரசாங்கத்தை ஆதரித்தார்களே தவிர, மக்களுக்கு எதனையும் செய்யவில்லையெனவும் அவர்கள் தீர்வு வரும் என்று மக்களை ஏமாற்றி, அரசியல் நாடகத்தை மேற்கொண்டிருந்தார்கள் எனவும் கூறினார்.

எனவே, கடந்த காலங்களில் ஏமாற்று அரசியலை செய்தவர்களை விலக்கிவிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை மக்கள் ஆதரிக்க வேண்டுமெனத் தெரிவித்த அவர், மாற்றம் என்பது அரசியல் பதவிகளுக்கான மாற்றமாக இருக்கக்கூடாதெனவும் கூறினார்.

“கடந்த காலங்களில், பல கட்சிகளில் போட்டியிட்டவர்கள், இன்று கட்சி மாறி, வேறு கட்சிகளில் போட்டியிடுகின்றனர். நாங்கள் தான் மாற்றுத்தலைமை என்று கூறுகின்றார்கள். அவர்கள் அனைவரும், ஓய்வூதியம் பெற்ற பின்னர் தான் போட்டியிடுகின்றனர். ஆனால், எமது கட்சியானது ஊழலற்ற நேர்மையான, சமூக ஆர்வலர்களையும் இளைஞர்களையும் களத்திலே இறக்கியுள்ளது” எனவும், சிவபாதம் கஜேந்திரன் தெரிவித்தார்.

இன்று, காணாமற்போனோர் உறவினர்கள் தமக்கு ஆதரவை வழங்கியுள்ளனரெனத் தெரிவித்த அவர், அதுபோல பல புத்திஜீவிகள் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியின் வெற்றிக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றனரெனவும் கூறினார்.

வவுனியா மாவட்டமானது, பல தொல்பொருள் சான்றுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றதெனத் தெரிவித்த அவர், அந்தவகையில், தொல்பொருள் உள்ள இடம் என்ற போர்வையில் மக்களின் பல காணிகள் அபகரிக்கப்பட்டடு இருக்கின்றன எனவும் இதனால், தமது பூர்வீகக் காணிகளில் தமிழ் மக்கள் குடியேற முடியாத நிலை காணப்படுவதாகவும் கூறினார்.

# ‘என்னை சி.வி அழைத்தார்’

■ க. அகரன்

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அண்மையில், என்னிடம் வந்து, தங்களது கட்சியில் இணைந்து, தேர்தலில் நிற்குமாறும், நீங்கள் குற்றமற்றவர் என்று பகிரங்கமாகக் கூறி, மன்னிப்புக் கேட்பதாகவும் கூறினார் என்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து உரைத்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், ஊஞ்சல்கட்டி பகுதி, மகாவலி எல் வலயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு உள்ளதாகவும் அந்தக் காணிகளின் உறுதிகளை இராணுவ முகாமில் கொண்டுவந்து வழங்குமாறு, அந்தப் பகுதி மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

இவ்வளவு நடந்துகொண்டு இருக்கும் போது, நாம் சாப்பாட்டு பார்சலுக்காக மொட்டுச் சின்னத்துக்குப் பின்னால் திரிகின்றோமெனவும், அவர் தெரிவித்தார்.

தங்களுடைய மண் பறிபோய்க் கொண்டிருப்பதாகவும் தாம் மொட்டுக்கும் யானைக்கும் பூனைக்கும் பின்னால் திரிந்தால் அது, இந்நிலை, நெடுங்கேணி வரைக்கும் வருமெனவும், சத்தியலிங்கம் கூறினார்.

தமிழரசுக் கட்சியுடன் ஒன்றாக இருக்க முடியாதென்று பிரிந்து போனவர்கள், இன்று பல கட்சிகளை உருவாக்கியிருக்கின்றார்களெனத் தெரிவித்த அவர், “தங்களது சொந்தப் பிரச்சினைகளுக்காக, வெளியில் சென்றவர்கள், கொள்கை முரண்பாட்டால் தான் வெளியில் சென்றார்களென்றனர். அப்படி சொன்னவர்கள், இன்று, ஒற்றுமையாக இருக்கிறார்களா?” எனவும் வினவினார்.

இன்று, பல கட்சிகள் இருக்கின்றனவெனத் தெரிவித்த அவர், ஆனால் கூட்டமைப்பினர் மாத்திரமே வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக வரக் கூடியவர்களெனவும் எனவே, கூட்டமைப்பின் மூலம் அதிகூடியவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டுமெனவும் கூறினார்.



## உண்மைக்குப் புறம்பான செய்தி:
# ‘பத்திரிகைக்கு எதிராக வழக்கு தாக்கல்’

■ மு.தமிழ்ச்செல்வன்



“கிளிநொச்சி - கண்டாவளை பிரதேசத்தில் சந்திரகுமார் அணி துப்பாக்கிச் சூடு” என முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தியை ஒன்றை வெளியிட்டுள்ள பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, நாடாளுமன்றத் தேர்தலில், சுயேச்சைக் குழு - 5இல் போட்டியிடும் வேட்பாளர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், உண்மையைக் கண்டறியும் நோக்கத்துக்காகவே தான் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் தேர்தல் நெருங்கி வருகின்ற இந்நேரத்தில், தோல்வியின் பயத்தால், சிலர் தங்கள் மீது அபாண்டமானதும் உண்மைக்குப் புறம்பானதுமான குற்றச்சாட்டுகளை பரப்பி வருகின்றனரெனவும் சாடினார்.

ஆனால், மக்கள் மிகத் தெளிவாக உள்ளனரெனத் தெரிவித்த அவர், அவர்களுக்கு எது உண்மை, எது பொய் என நன்றாகத் தெரியுமெனவும் கூறினார்.

“இருந்தும், பத்திரிகை ஒன்று உண்மையை ஆராயாது, தங்கள் தரப்புக் கருத்தைக் கேட்காது, ஒரு தரப்புக் கூறிய, உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளனர்.

“தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுணம் பிழைக்க வேண்டும் என்ற கணக்கில், கிளிநொச்சியில் எமக்கெதிரான சதிகள் இடம்பெற்று வருகின்றன. எனவே, பொதுமக்கள் இது தொடர்பில், அவதானமாக இருக்க வேண்டும்” எனவும், சந்திரகுமார் கேட்டுக்கொண்டனர்.




# சிந்திக்கவேண்டிய தருணங்களைத் தவறவிடாதீர்...

நேற்று நள்ளிரவுடன், அனைத்துத் தேர்தல் பிரசாரங்களும் முடிவடைந்திருக்கின்றன. இன்றும் நாளையும், தேர்தல் காலத்தின் அமைதிக் காலமாகக் கருதப்படுகிறது. இந்த இரண்டு நாள்களுக்கும் எந்த வேட்பாளரும் தங்களையும் தங்கள் கொள்கைகளையும் விளம்பரப்படுத்த முடியாது. இதுவரைகாலமும் வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை அவர்கள் சரியாகப் பயன்படுத்தியிருந்தால், இன்றும் நாளையும் மக்கள் சிந்தித்து, நாளை மறுதினம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் வாக்கெடுப்பில் தயங்காமல் வாக்களிப்பர்.


இச்சந்தர்ப்பத்தை வாக்காளர்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு உங்கள் தலைவிதியை நிர்ணயிக்கப்போகும் மக்கள் பிரதிநிதிகளைச் சரியாகத் தெரிவுசெய்யும் சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது. சொந்த பந்தம், ஊர்க்காரர், உறவுக்காரர் என்ற பேச்சுக்கு இத்தேர்தலில் இடமில்லை. மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றில் தங்கள் ஆளுமையை எவர் வெளிப்படுத்துவார் என நம்புகிறீர்களோ, அவர்களை மக்கள் தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் இது. இச்சந்தர்ப்பத்தில் வாக்காளர்கள் தவறிழைத்தால், எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு எதுவும் செய்ய முடியாமல் திண்டாடவேண்டி ஏற்படும்.


விகிதாசாரத் தேர்தல் முறைமையில், தாங்கள் விரும்பும் வேட்பாளர்கள் அனைவரும் வெற்றிபெறுவார்கள் என மக்கள் நம்பக்கூடாது. கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெறும் வாக்குகளின் அடிப்படையில், அதன் விகிதாசாரத்துக்கு ஏற்பவே பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். ஆகையால், இம்முறைமை தொடர்பில் மிக அவதானமாக வாக்காளர்கள் இருக்க வேண்டும். எந்தவொரு கட்சியோ சுயேச்சைக் குழுவோ, ஐந்து சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெறுமாக இருந்தால், அக்கட்சி அல்லது சுயேச்சைக்குழு பெற்ற வாக்குகள் நிராகரிக்கப்பட்டவையாகவே கருதப்படும். ஆகையால், வெற்றிபெற வாய்ப்புக் குறைவாக உள்ளவர்களுக்கு நீங்கள் வழங்கும் விருப்பு வாக்குகள், செல்லா வாக்குகள் ஆகிவிடும் என்பதைக் கவனத்திற்கொள்ளுங்கள்.

இதுவரை காலமும் வேட்பாளர்களின் பிரசாரங்களைக் கேட்டுவிட்டீர்கள். உங்களது எதிர்காலத்துக்கு, எந்தக் கட்சியின் கொள்கைகள் உறுதுணையாக இருக்கும் என்பதை, இந்த இரண்டு நாள்களும் தெளிவாகச் சிந்தித்து, புதன்கிழமை காலையிலிருந்து உங்களின் வாக்குகளை வழங்குவதற்கு வாக்காளர்கள் தயாராக வேண்டும். உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த மௌனகாலத்தை முழுமையாகப் பயன்படுத்தி, கட்சிகளின் வாக்குறுதிகளைச் சீர்தூக்கிப் பார்த்து, வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் தயாராக வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உங்களுக்குரித்தான வாக்குரிமையை எவருக்காகவும் விட்டுக்கொடுக்க வேண்டாம். உங்கள் வாக்கு உங்களின் உரிமை என்பதை ஒவ்வொரு வாக்காளரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்Mirror
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

நல்ல கனவு தடைப்படும்போது கூட, 'அட இது கலைந்து விட்டதே' எனக் கவலைப்படும் மனநிலையில்த்தான் மனிதர்கள் வாழுகின்றார்கள். போலியான சுகத்தைக்கூட, தவறவிட்டுவிட்டால் மனிதர்கள் கோபம் அடைந்துவிடுகின்றார்கள். தாம், பொய்மைக்குள்ளே புரள்வதை, அவர்கள் உணருவதேயில்லை.

நிஜமான சந்தோசங்களை எல்லோராலும் உருவாக்க முடியும். உழைக்காமல், தானாகவே எல்லாம் வந்துசேர வேண்டும் என்று, அநேகர் எதிர்பார்க்கிறார்கள். உழைப்பின் மூலம் முன்னேற விரும்பாமல், உடல்வலி இன்றி, செல்வங்களைச் சுளையாகப் பிடுங்க, பேராசைக்காரர்கள் எண்ணுகின்றார்கள்.

சில அப்பாவிகள், அதிர்ஷ்டம் எப்போது வரும் என, 'வரண்ட குளத்தில் கொக்கு இரை தேடுவது' போன்று, ஏங்குகின்றார்கள். சமூகவிரோதிகளின் செல்வத்தைக் கண்டு ஆசைப்படும் முட்டாள்கள், அவர்கள் பக்கம் சாய்வதுண்டு. கரைந்துபோகும் பொய் நிரந்தரமாகாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# 'கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்'



என்.கே. அஷோக்பரன்

மன்னர் ஆட்சிக்காலத்தில் ஓர் அரசின் இறைமை என்பது, ஆளும் முடியிலேயே தங்கியிருந்தது. அம்முடிக்குரிய மன்னர் எவரோ, அவரே இறைமையைப் பயன்படுத்தும் ஏகபோக அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

ஆட்சிக் கட்டமைப்புகள் பல உருவாக்கப்பட்டு இருப்பினும்கூட, இறைமை மன்னனிலேயே தங்கியிருந்தது. மன்னனின் முடிந்த முடிவை மறுதலிக்கும் அதிகாரம், எங்கேனும் இருக்கவில்லை. இதனால் மன்னன் வல்லாட்சியாளனாக மாறும் போதும் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் போதும் அதைச் சட்டரீதியாகக் கட்டுப்படுத்த வழிகள் இருக்கவில்லை.

ஆகவே, புரட்சியொன்றே அந்த எதேச்சாதிகாரத்தைத் தோற்கடிக்கக்கூடிய ஒரே வழியாக இருந்தது. மக்கள் புரட்சி செய்து, ஆட்சியிலிருந்த மன்னனை வீழ்த்தினார்கள். அடுத்து, ஆட்சிப்படியேறுபவர்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாதிருக்க, சில மட்டுப்பாடுகள் உருவெடுத்தன. அவை மக்களின் உரிமைகளாகவும் அதிகாரப் பிரிவுகளாகவும் உருப்பெற்றன.

மேற்குலகில் முடியாட்சி வீழ்ந்து, ஜனநாயகச் சிந்தனை உருப்பெறத் தொடங்கியதில் பிரெஞ்சுப் புரட்சியின் பங்கு மிக முக்கியமானது.

'இறைமை என்பது, மன்னனில் இல்லை; மக்களிடமே உண்டு' என்ற சிந்தனையும் குடியாட்சி, சட்டவாட்சி, அதிகாரம் என்பன ஓரிடத்தில் குவிக்கப்படக் கூடாது என்ற சிந்தனைகளும் வலுப்பெறத் தொடங்கின. நிற்க!

'ஏகபோகம்' என்பது, எப்போதுமே ஆபத்தானதொரு சிந்தனை. ஏகபோக அதிகாரம்,ஓரிடத்தில் குவியும் போது, அது மட்டுப்பாடில்லாத பெரும்பலத்தை தனிநபரிடமோ, செல்வாக்கு மிகு குழுவிடமோ வழங்கிவிடுகிறது. மற்றைய அனைவரும், அந்தத் தனிநபரினதோ குழுவினதோ கருணையில் தங்கியிருக்க வேண்டியவர்கள் ஆகிவிடுகிறார்கள். அவர்கள், அந்தத் தனிநபரினதோ, குழுவினதோ எதேச்சாதிகார நடவடிக்கைகளை விரும்பியோ விரும்பாமலோ, அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அரசியலில் மட்டுமல்ல, வணிகத்திலும் கூட, 'ஏகபோகம்' என்பது ஆபத்தானது. அதனால்தான், திறந்த சந்தையை ஊக்குவிக்கும் பல்வேறு வளர்ந்த நாடுகளும், 'ஏகபோகம்' ஏற்படுவதற்கு எதிரான சட்டப் பாதுகாப்பை, வலுவாக அமல்படுத்துகின்றன. வணிகத்தில், போட்டியை இல்லாது செய்யும் முயற்சிகளைக் கூட, கடுமையான சட்டங்களின் மூலம் தடுக்கின்றன.

ஏனென்றால், ஏகபோகம் ஆபத்தானது. அது அரசியலானாலும் சரி, அதிகாரமானாலும் சரி, வணிகமானாலும் சரி, அதிகாரமும் பலமும் செல்வாக்கும் ஓரிடத்தில் குவிவது, எவருக்குமே ஆரோக்கியமானதல்ல.

அரசியலைப் பொறுத்தவரையில், 'அதிகாரம் கெடுக்கும், அறுதியான அதிகாரம் அறுதியாகக் கெடுக்கும்' என்பார், அக்டன் பிரபு. இது நிரூபிக்கப்பட்ட உண்மை.

ஏகபோகம், அறுதியான அதிகாரத்தை ஒரு தரப்பிடம் குவிக்கிறது. இதன் விளைவு வல்லாட்சி. இதனால்தான், ஜனநாயகத்தின் மிக அடிப்படையான பண்புகளாக, மொன்டஸ்க்யுவின் 'அதிகாரப் பிரிவுக் கோட்பாடு'ம் அதன்பாலான அமெரிக்க அரசமைப்புச் சட்டத்திலிருந்து உதித்த, 'தடைகளும் சமன்களும்' என்ற சித்தாந்தமும் கருதப்படுகின்றன.

ஓரரசின் மூன்று அங்கங்களான சட்டவாக்கம், நிர்வாகம், நீதி ஆகியன, ஒரே நபர் அல்லது, நபர்களால் கட்டுப்படுத்தப்படக் கூடாது என்பதே, 'மொன்டஸ்க்யு' சொல்லும் அதிகாரப் பிரிவின் சாராம்சம் ஆகும். அதுபோல, 'தடைகளும் சமன்களும்' என்ற சித்தாந்தத்தின் சாராம்சமானது, இந்தப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு துறையும், தமக்குள் வல்லாட்சியை உருவாக்கிவிட முடியாதவாறு, ஏனைய துறைகள் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

மிக எளிமையாகப் பார்த்தால், அதிகாரம் ஓரிடத்தில் குவிவதையும் ஏகபோகத்தையும் தடைசெய்வதே, நவீன ஜனநாயகத்தின் மிக முக்கிய அடிப்படைப் பண்பு எனலாம்.

அதிகாரம் ஓரிடத்தில் குவிந்த போதெல்லாம், ஒரு தரப்பு ஏகபோகத்தைப் பெற்றுக்கொண்ட போதெல்லாம், ஜனநாயகம் பெரும் சிதைவைக் கண்டது. இதற்கு வரலாறு சாட்சி.

இந்த ஏகபோகத்துக்கு எதிரான சிந்தனையை, தமிழ்ச் சமூகம் மிக எளிதாகவே உணர்ந்திருந்தது. அதனால்தான், 'கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்' என்ற பழமொழி, எம்மிடையே பிரபலமாக இருக்கிறது. 'கீரை' என்பது, மிக எளிதாக முளைக்கும், மிக மலிவானதொரு மரக்கறிவகை. ஆனால், அந்த மலிவான கீரையை விற்கும் கடைக்குக் கூட, போட்டி இருக்க வேண்டும் என்ற, பலமான புரிதலைக் கொண்டிருந்த சமூகமாக, தமிழ்ச் சமூகம் இருந்திருக்கிறது என்பதற்கு, இந்தப் பழமொழியே சான்று.

ஜனநாயகம் என்பது, 'மக்களால், மக்களுக்காக நடக்கும் மக்களாட்சி' என்ற, ஆபிரஹாம் லிங்கன் உரைத்த ஜனநாயகத்தின் தாற்பரியம் என்பது உண்மையானால், ஜனநாயகம் என்பது, தலைவர்கள் பற்றியதாக அன்றி, கட்சிகள் பற்றியதாக அன்றி, மக்கள் பற்றியதாக அமைய வேண்டும்.

ஆனால், மக்கள் என்பவர்கள், ஒரே மாதிரியான விருப்பு வெறுப்புகளைக் கொண்டமைந்த ஒருமித்த தன்மையுடையவர்கள் (homogenuos) அல்ல. மக்களிடம் அபிப்பிராயபேதமுண்டு; மாறுபட்ட விருப்பு வெறுப்புகள் உண்டு; வேறுபட்ட தெரிவுகள் உண்டு. ஆகவே, ஜனநாயகம் என்பது, இவற்றை அரவணைக்கத்தக்கதாக அமைய வேண்டும். அதுதான் ஜனநாயகத்தின், உண்மையான தாற்பரியத்துக்கு நியாயம் செய்வதாக அமையும்.

இந்த இடத்தில், சிலருக்கு சில கேள்விகள் எழுவதுண்டு. போட்டி என்பது, வினைதிறனானதா, அது ஒற்றுமையைச் சிதைக்காதா, 'ஒற்றுமையே பலம்' இல்லையா? போட்டி என்பது, வினைதிறனானதா என்ற கேள்விக்கு, எது வினைதிறன் என்பதை நோக்குவது முக்கியமாகிறது.

முதலாவது உலக யுத்தத்தில் வீழ்ச்சிகண்டு, பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்த ஜேர்மனி, இன்னோர் உலகப் போரின் காரணகர்த்தாகவாக, ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளையும் கைப்பற்றுமளவுக்கும் உலகையே ஆட்டிப்பார்க்கும் அளவுக்கும் நாஸி ஆட்சியில், வினைதிறனாக வளர்ச்சி அடைந்திருந்தது. நாம் அத்தகைய வினைதிறனைத்தான் வேண்டுகிறோமா?

இன்று ஜனநாயகத் தெரிவுகள் அற்ற, ஒரே கட்சி மட்டுமே, ஆட்சி செய்யக் கூடிய நாடுகளாக சீனா, வடகொரியா, கியூபா, லாவோஸ் போன்ற நாடுகள் இருக்கின்றன. இவற்றின் மனித உரிமைநிலை, எவ்வாறு இருக்கிறது, மனித அபிவிருத்திச் சுட்டி எவ்வாறு இருக்கிறது, மனித வாழ்க்கைத் தரம் எவ்வாறு இருக்கிறது என்று பார்த்தால் 'வினைதிறன்' என்பதன் அர்த்தமற்ற தன்மை புரிபடும்.

பத்துப் பேர் விவாதித்து முடிவெடுப்பது என்பதில், மாற்றுக் கருத்துகள் இருக்கும்; உடன்பாடு எட்டப்படாது. ஆனால், எடுக்கப்படும் முடிவு சார்ந்த, பலதரப்பு அபிப்பிராயங்களையும் கேட்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது. அது பெரும்பான்மைத் தரப்பின் நன்மைக்காக, சிறுபான்மைத் தரப்பின் நலன்கள் பலிக்கடாவாக்கப்படாது இருப்பதற்கான தடைகளை உருவாக்கிறது.

மாற்றுக் குரல்கள் ஒலிப்பதற்கான வாய்ப்புக்கூட இல்லாவிட்டால், இங்கு வினைதிறன் என்பது, அதிகாரமுள்ளவர்களின் தெரிவுகளையும் விருப்பங்களையும் முடிவுகளையும் அமல்படுத்துவதாக மட்டுமே அமையும். அத்தகைய வல்லாதிக்க வினைதிறனைத்தான் விரும்புகிறோமா?

'ஒற்றுமை' என்பது, அரசியலைப் பொறுத்தவரையில் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன வார்த்தையாகிவிட்டது. எது ஒற்றுமை?

நாம் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக, எம்மீதான அடக்குமுறைகளைச் சகித்துக் கொண்டிருப்பதா?

ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கட்டாயத்துக்காக, எமது உரிமைகளைத் தாரைவார்த்துவிட்டு, உடன்படாத விடயங்கள் தொடர்பில் மௌனம் காப்பதா?

இதுதான் ஒற்றுமையா? இந்த ஒற்றுமையால் நாம் அடையப்பெறப்போவது என்ன என்பதுதான் முக்கியமானது. ஒற்றுமை என்பது, உண்மையாகவே அதன் அடைவுகளை ஏற்றுக்கொண்டு ஒன்றுபடுவதால் மட்டுமே பலமாக அமையுமே அன்றி, ஓர் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் காரணமாக, எமது அடிப்படைகளைத் தொலைத்துக்கொண்டு, ஒற்றுமை என்ற பதாகையை மட்டும் ஏந்திக்கொண்டு நிற்பதால் பயனில்லை.

ஒற்றுமைக்காகத் தனி மனித உரிமைகளையும் விருப்பங்களையும் சுதந்திரங்களையும் கொள்கைகளையும் தியாகம் செய்துவிடவேண்டும் என்பது, வல்லாதிக்க மனநிலையின் வெளிப்பாடு. ஒரு மனிதனைப் பார்த்து, "ஒற்றுமைக்காக உனது உரிமைகளையும் விருப்பங்களையும் சுதந்திரங்களையும் கொள்கைகளையும் நீ விட்டுக்கொடுக்க வேண்டும்" என்று கேட்பது, எவ்வளவு பெரிய அபத்தம்?

ஆனால், இதைப் பற்றியெல்லாம் சிந்திக்காது, வெறுமனே ஒற்றுமை என்ற சொல்லைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு திரிவதில், எந்த அர்த்தமும் இல்லை.

மாறாக, ஒற்றுமை என்பது, எவ்வாறு அமைய வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் சுயமரியாதையுடன் ஒன்றுபடக் கூடிய விடயங்களில் ஒன்றுபட்டும், மாற்றுக்கருத்துள்ள போது, அதைக் கௌரவத்துடன் தெரிவித்து, எதிர்ப்பை வெளிக்காட்டக் கூடிய வகையிலும் அமைய வேண்டும். அதுதான் நிஜ ஒற்றுமை. தவிர, சரணாகதி நிலையை ஒற்றுமை என்று வரையறுப்பது தவறு.

ஒரு மக்கள் கூட்டம் என்பது, பலவகைப் பூக்களும் செடிகளும் கொடிகளும் மரங்களும் புற்களும் என, உயிர்ப்பல்வகைமை நிறைந்த அழகிய பூந்தோட்டத்தைப் போன்றது. இங்கு வேற்றுமையில் ஒற்றுமையைத் தேடலாமே தவிர, எல்லாவற்றையும் ஒரே நிறத்திலும் ஒரேவடிவத்திலும் வடிவமைத்துவிட முடியாது. அது, இயற்கையானதுமல்ல; யதார்த்தமானதுமல்ல.

மாற்றக்கருத்து, உள்ளவரை தான் அது ஜனநாயகம். அது இல்லாவிட்டால், அது வல்லாதிக்கம். இது பாமரத் தமிழனுக்கும் தெரியும். அதனால்தான் அன்றே அவன் சொன்னான், "கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்" என்று.

## கடிதங்கள்

### சங்கானை சந்தையில் நிலவும் சுகாதார குறைபாடுகள்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சங்கானைச் சந்தையில், சுகாதாரக் குறைபாடுகள் பல காணப்படுவதாக, பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், இரண்டு மாடிக் கட்டடத்தில், 30க்கும் மேற்பட்ட கடைகள் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டன. இதைவிட, மரக்கறிச் சந்தை, பழைய இடத்திலேயே தற்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இங்கு 50க்கும் மேற்பட்ட வியாபாரிகள், வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

சண்டிலிப்பாய், விளான், பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, சுளிபுரம், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகள், தமது உற்பத்திப் பொருள்களை, சங்கானைச் சந்தைக்கு கொண்டு சென்று மொத்தமாக விற்பனை செய்வது தினமும் நடைபெறுகின்றது. இவ்வாறு பிரசித்திபெற்ற சங்கானைச் சந்தைக்கு, மேற்குறிப்பிட்ட ஊர்களைச் சேர்ந்த மக்களும் வந்து பொருள்களைக் கொள்வனவு செய்வார்கள்.

இவ்வாறு தினமும் ஆயிரக்கணக்கானோர் இந்தச் சந்தைக்கு வந்து செல்கின்றனர். இருந்தபோதிலும், இங்குள்ள மலசலகூடங்கள், தண்ணீர் வசதிகள் ஆகியவற்றில் பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன. சில நீண்ட காலமாகப் பூட்டிய நிலையில் காணப்படுவதுடன், மற்றையவை சுத்தப்படுத்தாமல், பயன்படுத்த முடியாதவாறு துர்நாற்றம் வீசுகின்றன. இவற்றைப் பயன்படுத்த முடியாதவாறு, பொதுமக்களும் வியாபாரிகளும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே, மக்களின் ஆரோக்கியத்துக்குப் பாதகமாக, சங்கானைச் சந்தையில் நிலவும் குறைபாடுகளுக்கு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை தீர்வு காணவேண்டும் என, பாதிக்கப்படும் பொதுமக்களும் வியாபாரிகளும் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

–ந. நந்தகுமார்

## மக்கள் மத்தியில்
# 'பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்'

■ பாறுக் ஷிஹான்

தமிழ், முஸ்லிம்களைப் பிரித்து, மக்கள் மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களுக்கு வாக்களிக்க வேண்டாமென, முஸ்லிம் உலமாக் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி வேண்டுகோள் விடுத்தார்.

முஸ்லிம் உலமாக் கட்சியின் தலைவரது அலுவலகத்தில், நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்துரைக்கையில்,



"நடைபெறவுள்ள தேர்தலில், முஸ்லிம் மக்கள்; குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள், சிறந்த தவைரைத் தெரிவுசெய்ய முன்வர வேண்டும்" என்றார்.

"தலைவர்கள், எமது மக்களை அடிமைகளாக வைத்திருப்பது, செயற்படுவது போன்றவை தவிர்க்கப்பட்டு, புதியவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். குறிப்பாக, ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலங்களிலே, பெரும் ஆபத்துகளை இந்த முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கியது. கல்முனை பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தரக் கூடியவர்கள், எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தை அலங்கரிக்க வேண்டும். பிச்சைக்காரனது புண் போன்று, கல்முனைப் பிரச்சினையைக் காட்டியே அரசியல் செய்கின்றவரை மக்கள் நிராகரிக்க வேண்டும். கல்முனை முஸ்லிம்கள், சகோதர தமிழ் மக்களுடன் ஒன்றாக வாழ வேண்டும்" எனக் கூறினார்.

## நம்பிக்கை மிகு தலைவர்களாக
# 'அதாவுல்லாஹ், டக்ளஸ், தொண்டமானுக்கு கௌரவம்'

"மஹிந்த ராஜபக்ஷவின் நம்பிக்கை மிகுந்த தலைவர்களாக, கிழக்கில் தேசிய காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ்வும் வடக்கில் ஈ.பி.டி.பி தலைவர் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், மலையகத்தில் முன்னாள் அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானும் இருந்து, தமது பிரதேசங்களுக்குத் தேவையானவற்றை அவர்களிடமிருந்து சாதித்துக் கொண்டுள்ளனர்" என, அகில இலங்கை ஜனநாயக முன்னணி சார்பில், சுயேச்சைக் குழு இலக்கம் 18இல் போட்டியிடும் வேட்பாளர் என்.எச்.உமர் லெப்பை தெரிவித்தார்.

இலங்கை ஜனநாயக முன்னணி சார்பில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "முன்னொரு காலத்தில் தேர்தல் இடம்பெறும் சந்தர்ப்பங்களில், சுதந்திரம், உரிமைகள், அபிவிருத்திகள் பற்றிப் பேசப்பட்டு மக்களுக்கான சேவைகளைப் பெற்றுத்தருவோம் என்று பேசினர். இன்று அவற்றுக்குப் பதிலாக, இனவாதமும் பிரதேசவாதமுமே பேசப்படுகிறது" என்றார்.

"சிறுபான்மை இனங்கள், தமது உரிமைகளைச் சரியாகப் பெற்றுக்கொண்டு, இந்நாட்டில் வாழ வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனாலும், அதையே இனவாத முலாம் பூசி விஷக்கருத்தாக மக்கள் மத்தியில் திணிக்கக் கூடாது.

"இப்பொழுது ஆட்சியிலுள்ள மொட்டு ஆட்சியாளர்களிடம் மேலோங்கியுள்ள விடயம், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்பதேயாகும். அதனை பெறுவதற்கான சகல ஆயத்தங்களும் அவர்கள் செய்கிறார்கள். அவர்களின் வியூகம் வென்று அதன் பங்காளிகளாக சிறுபான்மை இன மக்கள் இருப்பது எல்லோருக்கும் நன்மை பயக்கும்" என அவர் மேலும் கூறினார்.

# 'அதாவுல்லாஹ்வை அமைச்சராக்குவதே கருணாவின் இலக்கு'

■ வி.சுகிர்தகுமார்



"தமிழ் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு, தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் நிலையில், அதற்குப் பதிலாக முஸ்லிம் அல்லது சிங்களப் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் என்பதை, பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும்" என்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

குறிப்பாக, அதாவுல்லாஹ் போன்றவர்களே தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கப்படும் எனவும் அதனையே கருணா விரும்புவதாகவும், அதாவுல்லாஹ்வை அமைச்சராக்குவதே கருணாவின் இலக்கு எனவும் அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கோளாவில், காந்தி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், "அமைச்சர் ஒருவரால் செய்ய முடியாத அபிவிருத்தி வேலைத்திட்டங்களை, அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்துள்ளேன். இதற்கமைவாக, சுமார் 1,800 மில்லியன் ரூபாய் நிதிக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டேன்" என்றார்.

"கடந்த காலத்தில், எமது மக்களின் உரிமை, அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில், 78 தடவைகள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்துள்ளேன். அதேநேரம், அபிவிருத்தி விடயத்தையும் சரியாக முன்னெடுத்துள்ளேன்.

"இவற்றைவிட, இந்த மண்ணின் மகத்துவத்தைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் காலத்தில் அதிகளவான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

"22 வருடங்களாக அமைச்சராக இருந்த அதாவுல்லாஹ் மேற்கொண்ட அபிவிருத்தியோடு, 4 வருடங்களே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து நான் மேற்கொண்ட அபிவிருத்திகளை ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் ஒரு கிராமத்தைத்தான் அபிவிருத்தி செய்தார். ஆனால் நான், மாவட்டத்தில் உள்ள 52 கிராமங்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை வழங்கியுள்ளேன். எமது பகுதியிலுள்ள களப்பை வெட்டும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அதனைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டத்தையும் முன்னெடுத்து, மீனவர், விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்" என்றார்.

## இனவாதங்களுக்கு அப்பால்
# 'எமது மக்களை வாழவைக்க வேண்டும்'

■ எம்.எல்.எஸ்.டீன்



பிரதேச வாதங்களுக்கும் இனவாதங்களுக்கும் அப்பால், தமது மக்களை வாழவைக்க வேண்டுமெனத் தெரிவித்த தேசிய காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், தமிழர்களோ முஸ்லிம்களோ, சிங்களவர்களோ, யாராக இருந்தாலும் தம் முன்னோர்கள் வாழ்ந்த இந்த மண்ணிலே வாழ வேண்டுமெனவும் கூறினார்.

அக்கரைப்பற்று - பள்ளிக்குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், இன்னும் கத்திக் குத்து, துப்பாக்கி வேட்டு, இரத்த ஆறு, முஸ்லிம், தமிழ், சிங்களம் என்று பேசிக் கொண்டிருந்தால், வாழ்வது எப்போது எனவும் வினவினார்.

தலைவர் மரணித்து 20 ஆண்டுகளிலே, தாங்கள் நிறைய பாடங்களைக் கற்றிருக்கிறோமெனத் தெரிவித்த அவர், எல்லாப் பிரதேசங்களிலும் இருந்து தேசிய காங்கிரஸின் பக்கம் மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் எனவும் கூறினார்.

"இவர்களை விடவும், தமிழ் மக்கள் தேசிய காங்கிரஸை ஆதரிப்பதற்கு ஆயத்தப்படுகிறார்கள். நாம் இன்னும் கதவு திறந்து எடுப்பதற்கு முடியாத நேர பஞ்சத்திலே இருக்கிறோம்"எனவும், அதாவுல்லாஹ் கூறினார்.

## தேர்தலின் பின்னர்
# 'மட்டு. மக்களுக்குத் தீர்வு கிடைக்கும்'

■ க.விஜயரெத்தினம்



"மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு, பொதுத் தேர்தலின் பின்னர் உடனடித் தீர்வைப் பெற்றுத்தருவேன்" எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் ப.சந்திரகுமார், அதற்கான நடவடிக்கையைத் துரிதமாக முன்னெடுத்து வருவதாகவும் கூறினார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், ஏமாற்று அரசியல் கலாசாரத்துக்கு, மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மக்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றார்.

"வடக்கு மாகாண அரசியலைப் பாருங்கள், அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களும் இருக்கின்றனர். மறுபுறம், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர். இதனால் அங்கு, சமாந்தரமாக அபிவிருத்தி நடைபெறுகின்றது" என்றார்.

ஆனால், கிழக்கில் தமிழர் அமைச்சராக இருக்கின்றாரா என வினவிய அவர், அவ்வாறான நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அரச கட்சியில் போட்டியிடுகின்ற மக்கள் சேவகர்களைத் தெரிவு செய்ய வேண்டுமெனவும் கூறினார்.

## சிறுபான்மைக் கட்சிகளே
# 'புதிய நாடாளுமன்ற ஆட்சியைத் தீர்மானிக்கும்'

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

இம்முறை அமையவிருக்கும் புதிய நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை நிரூபிக்க, சிறுபான்மைக் கட்சிகளே தீர்மானிக்கும் சக்தியாக மாறுமெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் அப்துல்லா மஹ்றூப், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, மலையக கட்சிகள் போன்றனவே தீர்மானிக்கும்" என்றார்.

கிண்ணியாவில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றி அவர், "முஸ்லிம்கள், பயங்கரவாதிகள் அல்லர். ஆனால், உதய கம்மன்பில போன்ற இனவாதிகள், முஸ்லிம் சமூகத்தைப் பயங்கரவாதி எனச் சித்தரித்து வருகின்றனர். இதற்குத் துணையாக, எஸ்.பீ.திஸாநாயக்க, ரத்தன தேரர், கெஹெலிய ரம்புக்வெல்ல, ஞானசாரர், விமல் வீரவன்ச போன்றவர்களே முட்டுக் கொடுக்கிறார்கள்" என்றார்.

> **கோட்டாபய 52 சதவீத வாக்குகளைப் பெற்றார். இவரால், 80 தொடக்கம் 90 வரையான ஆசனங்களையே பெற முடியும்**

"சஹ்ரான் எனும் கயவன், ஒரு நாள் தோன்றி; ஒரு நாள் மறைந்தான். எனினும், இவனுடன் தொடர்புபடுத்தி, முன்னாள் அமைச்சர் ரிஷாட்டைக் குற்றஞ்சாட்டி, தெற்கிலும் சர்வதேசத்திலும் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பயங்கரவாதிகளாகக் காட்ட நினைக்கிறார்கள்" என்றார்.

இதேவேளை, "பெரும்பான்மை ஆசனங்களை யாரும் பெறமுடியாது. இதனை, 1989களில் இருந்து நாம் கண்டு வருகிறோம். 1994 ஜனாதிபதித் தேர்தலில், சந்திரிகா அம்மையார் 63 சதவீத வாக்குகளைப் பெற்ற அதே தருணம், பொதுத் தேர்தலில் 101 ஆசனமே பெற்றார்.

"இதுபோன்று, கோட்டாபய ராஜபக்ஷ 52 சதவீத வாக்குகளைப் பெற்றார். இவரால், 80 தொடக்கம் 90 வரையான ஆசனங்களையே பெற முடியும்" என்றார்.



## என்னுடைய
# 'அரசியல் பயணம் தனித்துவமானது'

■ எப்.முபாரக், ஏ.எம்.ஏ.பரீட்

"திருகோணமலை மாவட்டத்தில் நான் மேற்கொள்ளும் அரசியல் பயணம் தனித்துவமானது" என, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், "நான் எனது நான்கரை வருட நாடாளுமன்றக் காலத்தில், திருகோணமலை மாவட்டத்தில் தனித்துவமான அரசியல் பயணமொன்றை மேற்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எதுவித ஊழல் குற்றச்சாட்டுகளும் இல்லாமல் என்னால் பணியாற்ற முடிந்தது.

"நான் அதிகாரத்தில் இருந்த காலப்பகுதியில், எமது மாவட்டத்துக்கு வரும் அபிவிருத்திகள் எவற்றையும் தடுத்த வரலாறு இல்லை. யார் அபிவிருத்திக்கான நிதிகளைக் கொண்டுவந்தாலும், அவர்களுக்கு நான் இடையூறாக இருந்ததில்லை. அபிவிருத்தித்



திட்டங்களுக்குப் பெயர் வைக்க, எந்த அரசியல்வாதியுடனும் நான் முரண்பட்டதில்லை. நான் இன்னமும் வாடகை வீட்டிலேயே வசிக்கிறேன். எனது பெயரிலோ எனது உறவினர் பெயரிலோ, எந்த உரிமைப் பத்திரங்களுமில்லை. எனது மனதுக்கு திருப்தி அளிக்கும் விதத்தில் நான் பணியாற்றியுள்ளேன்.

"இந்தத் தேர்தல் காலங்களில்கூட, ஏனைய வேட்பாளர்களை விமர்சித்து எனது பிரசாரப் பணிகளை நானோ எனது ஆதரவாளர்களோ முன்னெடுக்கவில்லை. நான் செய்த சேவைகளையும் செய்ய எண்ணியுள்ள சேவைகளையும் கூறியே, நான் உங்களிடம் வாக்குக் கேட்கிறேன்.

"எனது செயற்பாடுகள் திருப்தி அளித்திருப்பின், இம்மாவட்ட மக்கள் எனக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்குவார்கள் என நம்புகிறேன்" என்றார்.

## கிழக்கு மாகாணத்தில்
# 'பெரும்பான்மையின விகிதாசாரத்தை அதிகரிக்கச் சதி'

■ எஸ்.சபேசன்

"தாண்டியடி பகுதியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில், அடுத்தாண்டு நிச்சயம் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறும்" என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - தாண்டியடி பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே, அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

இதன்போது கருத்துரைத்த அவர், "நான் எனது சுயநலம் சார்ந்துச் சிந்திப்பவன் இல்லை. கடந்த காலங்களில், நான் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் செய்துள்ளேன்" என்றார்.

"குறிப்பாக, எமது எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு, பல்வேறு வகையான உதவித் திட்டங்களை வழங்கியுள்ளேன். இன்று, நேற்று அல்ல, மிக நீண்ட



காலமாக, மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை எவ்வாறு ஊக்குவிக்க வேண்டும் என்பது குறித்துச் சிந்தித்து வருகின்றேன்.

"திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில், பெரும்பான்மையின நாடாளுமன்றத்தின் பிரதிநிதித்துவம் இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே, பெரும்பான்மையின நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லை. இது, தென்மாகாணத்தில் இருப்பவர்களுக்குப் பெரிய தாக்கமாகும்.

"தொல்பொருள் ஆராய்ச்சிக்கான செயலணியொன்று கிழக்கில் உருவாக்கப்பட்டதற்கு, கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையின விகிதாசாரத்தை அதிகரிக்க வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்துக்காக ஆகும்.

"அதேபோன்று, கடந்த சில வருடங்களாக, தாண்டியடி பகுதியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவில்லை என்பது கவலையளிக்கின்றது. அடுத்தாண்டு, தடைகளை மீறி நிச்சயம் இந்தப் பகுதியில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் என்பதை உறுதியுடன் கூறிக்கொள்கின்றேன். எந்தத் தடை வந்தாலும், அவற்றை மீறி நானே முன்னின்று இந்த நிகழ்வுகளை நடத்திக்காட்டுவேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்" என்றார்.

ஜனாதிபதி, பிரதமரின் கரங்களைப் பலப்படுத்த

# ‘எல்லாவல பரம்பரையில் ஒருவர் தேவை’

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

“எல்லாவல பரம்பரையினர் சாதி, இன, மத வேறுபாடுகளின்றி அரசியல், சேவைகளைச் செய்தவர்கள். அவ்வாறான பரம்பரையைச் சேர்ந்த ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி ஜனாதிபதியினதும் பிரதமரினதும் கரங்களைப் பலப்படுத்துவது, பலாங்கொடை மக்களின் விசேடமாக இப்பிரதேச முஸ்லிம் சமுதாயத்தின் தலையாய கடமையாகும்” என்று, தேசியப் பட்டியல் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

பலாங்கொடை தெஹிகஸ்தலாவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த அவர், “எல்லாவல குடும்பத்தினருடன் தனக்கு பல வழிகளிலும் தொடர்பு இருப்பதாகவும் சிலர் தன்னுடன் சட்டக்கல்லூரியில் சமகாலத்தில் சட்டக்கல்வி பயின்றவர்களாவர். எனவே இன்னும் சில நாள்களில் அமையப் போகின்ற அரசாங்கத்தில் தூரதிருஷ்டியுடன் நாட்டின் சகலதுறை அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பொருத்தமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், சகாக்கள் எமது செயலணிக்குத் தேவை. அவ்வாறான ஒரு பொருத்தமான அரசியல்வாதியை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்” என்றார்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு

# ‘அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு’

■ டி.ஷங்கீதன்

அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாத இந்த அரசாங்கம், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதைப்பற்றி பேசிக் கொண்டிருப்பதாகச் சாடிய ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் வே.இராதாகிருஷ்ணன், அந்தப் பெரும்பான்மை கிடைத்தால், ஆசியாவின் அதிசய நாடாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் இலங்கை மாறிவிடும் என்றும் தெரிவித்தார்.

பொகவந்தலாவையில் நேற்று (2) நடைபெற்ற இறுதித் தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“அத்தியாவசியப் பொருள்களின் விலை, இலங்கை வரலாற்றில் என்றுமே இல்லாதவாறு அதிகரித்துள்ளது. மஞ்சள் ஒரு கிலோ 6,000 ரூபாய்க்கும் உழுந்து ஒரு கிலோகிராம் 1,200 ரூபாய்க்கும், செமன் 280 ரூபாய்க்கும் என பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் எந்த ஒரு திட்டமும் இல்லை.

“ஆனால் இந்தத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுத் தருமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்கின்றது. மக்கள் நலன்சார்ந்த எந்த ஒரு விடயத்திலும் அக்கறை செலுத்தாத இந்த அரசாங்கம் மக்களிடம் வாக்குக் கேட்பது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது. எனவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்” என்றார்.



# ‘தனித்துவமான பயணத்துக்கு சக்தி வழங்க வேண்டும்’



“தனித்துவத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் என் தனித்துவமான பயணத்துக்குச் சக்தி சேர்க்க வேண்டும்” என்று, சுயேச்சை வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

பொகவந்தலாவ, நானுஓயா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர்,

“தனித்துவமான என் தந்தையின் செயற்பாடுகள்தான் அவரைத் துணிவுமிக்க தலைவனாக அடையாளம் காட்டியது. தனித்துவமான அவரது கொள்கைகள்தான் சிறையில் இருந்தும் அவரைத் தேர்தலில் வெற்றி பெறச்செய்தது. தனித்துவமான அவரது சிந்தனைகளால்தான் தனி ஒருவராக அவரால் இலங்கையின் அரசாங்கத்தையே மாற்றியமைக்க முடிந்தது. தனித்துவமான உறுதிதான் அவரை சிறைக்கம்பிகளையே வெல்ல வைத்தது. சோர்வடைந்திருந்த எமது சமூகத்துக்குத் தன்னம்பிக்கையைக் கொடுத்து தலை நிமிரச் செய்தது. ஆனால் எம் சமூகத்துக்கு நம்பிக்கையாக வழிகாட்ட வேண்டியவர்கள் தமது தனித்துவத்தை இழந்து, அடுத்தவர்களின் பலத்தில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

“இவர்களால் எமது சமூகத்துக்கான தனித்துவத்தை எப்படிக் காப்பாற்ற முடியுமெனப் புரியவில்லை. நான் எனது தந்தை காட்டிய வழியில் தனித்துவத்தோடு களமிறங்கியுள்ளேன். என் சமூகத்துக்கான எனது பணிகளும் நிச்சயமாகத் தனித்துவமாகவே தொடரும். என்னைச் சந்திக்கும் பெண்கள் அனைவரும் கட்சி பேதங்களை மறந்து ஒரு பெண்ணான எனக்கு ஆதரவு தெரிவிப்பது பெருமையளிக்கின்றது மகிழ்ச்சியளிக்கின்றது.

“எந்த அரசாங்கம் அமைந்தாலும் அவர்களிடம் பேரம் பேசி எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் போராட்ட குணம் எமக்கு இருக்க வேண்டும். நாம் தனித்துவமாகச் செயற்பட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும். இன்னும் ஐந்து வருடங்களின் பின் நான் என் மக்களைச் சந்திக்கும்போது, எனக்கு வாக்களித்ததன் முழுப் பயனையும் அவர்கள் பெற்றிருப்பதை உணரச்செய்வேன்” என்றார்.

தேர்தலின் பின்னர்

# ‘மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவேன்’

■ எஸ்.கணேசன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸே, மலையக மக்களின் பலம் என்று தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் ஜீவன் தொண்டமான், அபிவிருத்திகளையும், உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான பேரம் பேசும் சக்தி தம்மிடமே இருப்பதாகவும் தெரிவித்தார்.

தேர்தலுக்குப் பின்னர், மலையகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்த அவர், காங்கிரஸை மேலும் பலப்படுத்தி, மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் பயணத்தில் அனைவரும் இணைய வேண்டும் என்றும் அவர் அழைப்புவிடுத்தார்.

கொட்டகலையில், நேற்று (2) நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்துரைத்த அவர்,

> **இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், எங்கு பிரசாரக் கூட்டங்களை நடத்தினாலும் மக்கள் திரண்டுவந்து பேராதரவை வழங்குகின்றனர். எமக்கான ஆதரவு நாளுக்கு நாள் பெருகியதை அண்மைக்காலங்களில் கண்டோம்**

“இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எங்கு பிரசாரக் கூட்டங்களை நடத்தினாலும் மக்கள் திரண்டுவந்து பேராதரவை வழங்குகின்றனர். எமக்கான ஆதரவு நாளுக்கு நாள் பெருகியதை அண்மைக்காலங்களில் கண்டோம். இன்று பேராதரவு கிட்டியுள்ளது. மலையகத்தின் தாய்க்கட்சியான காங்கிரஸின் பின்னால்தான் நாம் நிற்போம் என்பதை மக்கள் உறுதிப்படுத்திவிட்டனர்” என்றார்.

“விமர்சனம் அதேபோல் குறைகூறும் அரசியலுக்கு அப்பால், கொள்கை ரீதியில் திட்டங்களை முன்வைத்தே எமது அணி பிரசாரத்தை முன்னெடுத்தது. இது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வாறானதோர் அரசியல் கலாசாரத்தையே மக்கள் விரும்புகின்றனர். அதனை ஏற்படுத்துவதற்கே நாம் முயற்சிக்கின்றோம்” என்றார்.



# ‘காணி உரிமையை பெறுவது அவசியம்’

பறிக்கப்பட்ட வாக்குரிமையை மீளப்பெற்றுவிட்டு, பிரஜாவுரிமை கிடைத்துவிட்டதாக பெருமைப்பட்டுக் கொண்டு இருப்பதில் அர்த்தம் இல்லை என்றும் ஏனைய மக்கள் பெறும் அனைத்து உரிமைகளையும் மலையகச் சமூகம் அனுபவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தேசிய பட்டியல் வேட்பாளர் மயில்வாகனம் திலகராஜ், மலையக மக்கள் முழுமையான காணி உரித்தைப் பெற்றுக் கொள்ளும் நாளிலேயே, உண்மையான பிரஜாவுரிமை பெற்றவர்களாவர் என்றும் தெரிவித்தார்.

இவ்விடயத்தை வலியுறுத்தியிருந்த முன்னாள் அமைச்சர் கயந்த கருணாதிலக்க போன்றவர்கள் தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் காணி அமைச்சர் ஆகும்போதே, இவ்விடயம் சாத்தியமாகும் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட வேட்பாளர் கயந்த கருணாதிலக்கவுக்கு ஆதரவுத் தெரிவித்து, காலி எல்பிட்டியவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர்,



> **காலி மாவட்டத்தில் வாழும் தமிழர்கள், சிங்களம் பேசும் தமிழர்கள் என்ற அளவுக்கு மாறிவிட்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு நமது கடந்த கால அரசியல் தலைமைகள் ஓரங்கட்டி வைத்துள்ளனர்**

“காலி மாவட்டத்தில் வாழும் தமிழர்கள், சிங்களம் பேசும் தமிழர்கள் என்ற அளவுக்கு மாறிவிட்டிருக்கிறார்கள். அந்தளவுக்கு நமது கடந்த கால அரசியல் தலைமைகள் ஓரங்கட்டி வைத்துள்ளனர். சிங்களம் பேசுவதும் ஒரு தகைமையே. தாய் மொழியான தமிழ்மொழி மறவாது எத்தனை மொழிகளையும் கற்றல் வேண்டும். நான் சிங்கள மொழியில் நாடாளுமன்றில் பேசி இருக்காவிட்டால் கயந்த கருணாதிலக்க போன்றவர்கள் புதிதாக நாடாளுமன்றம் வந்த என்னை அடையாளம் கண்டிருக்க மாட்டார்கள். மலையகத் தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளை நான் சிங்கள மொழியில் பேசியபோது பெரும்பாலானவர்களின் கவனத்தைப் பெற்றது” என்றார்.

அடக்குமுறையாளர்களின் கைகளுக்குள் ஆட்சி அதிகாரம் சென்றுவிட்டால்

# ‘மலையகத்தில் மாற்றம் வராது’

■ எஸ்.கணேசன்

“அடக்குமுறையாளர்களின் கைகளுக்குள் ஆட்சி அதிகாரம் சென்றுவிட்டால், மலையகத்தில் மாற்றம் வராது. எனவே, மலையகத்தில் மறுமலர்ச்சிக்கான தளத்தை உருவாக்கிய தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குப் பேராதரவு வழங்கி, ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி மலர ஒத்துழைப்பு வழங்குங்கள்” என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

லிந்துலை மவுஸ்ஸாஎல்ல பகுதியில், நேற்று (2) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர்



இந்த அழைப்பை விடுத்தார். அவர் மேலும் உரையாற்றுகையில், “பிரசாரங்களின்போது எமக்கு மக்கள் முழு ஆதரவையும் வெளியிட்டனர். 5ஆம் திகதிவரை இந்த ஆதரவு தொடரவேண்டும். வாக்களிப்பு தினத்தன்று தொலைபேசி சின்னத்துக்கு முன்னால் புள்ளடியிட்டு, மூன்று விருப்பு வாக்குகளையும் எம்மூவருக்கும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறைகூறி வாக்குக் கேட்கவில்லை. மாறாக நான்கரை வருடங்கள் சேவை செய்து விட்டு வந்தே ஆணைகோருகின்றோம்.

“மலையக மக்களின் ஆதரவானது ஏமாற்றுபவர்களின் கைகளுக்குச் சென்றுவிடக்கூடாது. எம்மைப்போன்ற நல்லவர்கள் அங்கம் வகிக்கும் முற்போக்குக் கூட்டணியின் கைகளுக்குள்ளேயே அதிகாரம்வர வேண்டும். இதனை மக்கள் வழங்குவார்கள் என நம்புகின்றோம். நான்கரை வருடங்களில் மலையகத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்திருந்தாலும் எதனையும் செய்யவில்லையென 80ஆண்டுகள் சும்மா இருந்தவர்கள் விமர்சனம் செய்கின்றனர்.

“நாம் வென்றாலும், தோற்றாலும் மக்களுடன்தான் இருப்போம். ஆனால், ஏனையோர் இங்கிருந்து ஓடிவிடுவார்கள். இந்த அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைபலம் கிடைத்தால் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும். இதனால் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்துக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே, அடக்குமுறை அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி ஜனநாயக ஆட்சியை மலரச்செய்வதற்காக தொலைபேசி சின்னத்துக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்” என்றார்.

இணைந்து செயற்பட்டால்

# ‘மூன்று தமிழ்ப் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பலாம்’

■ எம்.ஏ.எம்.ஹசனார்

பதுளை மாவட்டத்தில் வாழும் சிறுபான்மையிரான நாம் இணைந்து செயற்பட்டால், மூன்று பிரதிநிதிகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று, வேட்பாளர் லத்தீப் மௌலவி தெரிவித்தார்.



பண்டாரவளை, தியத்தலாவை நகரங்களில், நேற்று (2) நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த அவர், இம் மாவட்டத்தில் வாழும் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம்களின் வாக்குகளை வைத்து பெரும்பான்மையினர் பலர் கடந்த காலங்களாக நாடாளுமன்றம் செல்கின்றனர். ஆனால், அவர்களால் சிறுபான்மையினருக்கான சேவைகள் போதுமானவையாக இல்லை. அதனைத் தட்டிக் கேட்க நாதியற்றவர்களாக அவர்கள் தருவதை மட்டும் பெற்று ஆமா சாமி போட்டுக்கொண்டு வருகிறோம்.

“இந்நிலைமை முற்றாக மாறவேண்டும். நமது வாக்குகளைப்பெற்று நம்மவர் முதுகிலேயே சவாரிசெய்து வரும் இவர்களை நாம் முற்றாக புறந்தள்ளி எமது தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்” என்றார்.

நல்லாட்சியில்

# ‘நூரளை மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி’

■ கௌசல்யா, சுஜிதா

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்களை நுவரெலியா மாவட்டத்தில் முன்னெடுக்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியதாகவும் அதற்கமைய வீதி அபிவிருத்தி, பாலங்கள் அபிவிருத்தி, வீடமைப்புத் திட்டங்கள் எனப் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்களுக்காக பல மில்லியன் ரூபாய் பணத்தை நுவரெலியா மாவட்டத்துக்காக ஒதுக்கப்பட்டதாகவும் ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா



மாவட்ட வேட்பாளர் கே.கே. பியதாஸ தெரிவித்தார்.

“தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக, தேர்தலில் வெற்றிபெற்றால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதாந்தம் 20,000 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கப்படும் எனச் சிலர் கூறி வருகின்றார்கள். இது எவ்விதத்தில் சாத்தியம் என்றும் கேள்வி எழுப்பினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 3 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

AUGUST 03, 2020
MONDAY
VOL: 003/063
RS. 10.00
UPCOUNTRY ★★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

## பொதுத் தேர்தலில் ‘சவால் இல்லை’



தங்களுக்கு எதிராகத் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டிய கட்சிகளுக்குள் உட்கட்சி மோதல்கள் இடம்பெற்று உள்ளமையால், இம்முறை பொதுத் தேர்தல், எங்களுக்குச் சவாலாக இல்லை எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வாக்களிக்காமல் விடுவது ‘கொடூர பாவம்’



ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே, மக்கள் நம்பிக்கையைக் காப்பாற்றக் கூடிய ஒரே கட்சியெனத் தெரிவித்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வாக்களிக்காமல் விடுவது கொடூர பாவமாகும் என்றார். மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## குற்றச்சாட்டுகள் மத்தியில் ‘உண்மை வெல்லும்’



தனது தந்தையின் பின்னர், இந்நாட்டில் பொது மக்கள் சகாப்தம் ஒன்றைத்தான், ஏற்படுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராக எவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் ‘உண்மை ஒருநாள் வெல்லும்’ என அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அரசாங்கத்தின் மீதான ‘நம்பிக்கை சரிந்தது’



புதிய ஜனாதிபதியும் பழைய பிரதமரையும் கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை, மிகவேகமாகச் சரிந்துவிட்டது எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, கொரோனா வைரஸ் காலத்தில் தேர்தலை நடத்துவதற்கே அரசாங்கம் முயன்றது.

தொடர்ச்சி P2

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### வாக்களிப்பது எப்படி?

வாக்கை அடையாளமிடலும் விருப்புகளை அடையாளமிடலும் பற்றிய சுருக்க விளக்கம்

### வாக்குச் சீட்டின் மாதிரி

| | | |
|---|---|---|
| அ கட்சி | * | |
| ஆ கட்சி | * | |
| இ கட்சி | * | X |
| ஈ கட்சி | * | |
| உ கட்சி | * | |
| சுயேச்சைக் குழு 1 | * | |
| சுயேச்சைக் குழு 2 | * | |
| சுயேச்சைக் குழு 3 | * | |
| சுயேச்சைக் குழு 4 | * | |
| சுயேச்சைக் குழு 5 | * | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 (X) | 2 (X) | 3 (X) | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | | | | | | | |

இது வாக்குச் சீட்டொன்றின் மாதிரியொன்று மாத்திரமே

* ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் சின்னம்

- அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவற்றுக்குரிய சின்னங்களுடன் மேல் பகுதியில் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு சின்னத்துக்கும் எதிரே ஒரு வெற்றுக்கூடுள்ளது. நீங்கள் விரும்பும் எந்தவொரு கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவுக்கோ அதற்குரிய சின்னத்துக்கு எதிரேயுள்ள வெற்றுக் கூட்டினுள் உங்கள் வாக்கை அடையாளமிட முடியும். வாக்கை அடையாளமிடும்போது நீங்கள் விரும்பிய சின்னத்துக்கு எதிரேயுள்ள வெற்றுக் கூட்டினுள் “புள்ளடியொன்றை ("X") ” இடுதல் வேண்டும்.
- ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒதுக்கப்பட்ட இலக்கங்கள், தேர்தல் மாவட்டத்துக்குள் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குச் சீட்டின் கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளன. விருப்புகளை அடையாளமிடும்போது, நீங்கள் விரும்பிய வேட்பாளரின் மூன்றுக்கு மேற்படாதவாறு வேட்பாளர்களுக்கு அதாவது, மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கையான வேட்பாளர்களுக்கு அதாவது மூன்றுக்கு மேற்படாத இலக்கங்கள் மீது உங்கள் விருப்புகளை அடையாளமிட முடியும்
- ஒரு கட்சிகுழு சார்பாக வாக்கொன்று அடையாளமிடப்படாத ஒரு வாக்குச்சீட்டு செல்லுபடியாகாது. அதற்கு எந்தவொரு பெறுமதியும் இல்லையென்பதுடன், அது நிராகரிக்கப்படலாம்.
- முதலில் வாக்குகளை அடையாளமிட வேண்டுமென்பதோடு, அதன் பின்னர் விருப்புகளை அடையாளமிட முடியுமென்பதை தயவுடன் கவனத்தில் கொள்ளவும்.
- வாக்களிப்பதற்கு புள்ளடியை ("X") மாத்திரம் பயன்படுத்தவும்
- **குறிப்பு: 2020 ஓகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பில், தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட மாதிரி வாக்குச்சீட்டு**

©TM GraphicDesk

## மலையகத்தில் நிர்மாணிக்கப்பட்ட 35,000 வீடுகளுக்கும் காணி உறுதி

### செந்திலின் 3 கோரிக்கைகளை நிறைவேற்ற ஜனாதிபதி உறுதி

அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட 35 ஆயிரம் வீடுகளுக்கு, அரசாங்கக் காணி உறுதிப்பத்திரம் வழங்குவது உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிடம், செந்தில் தொண்டமான் முன்வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## குழந்தைகளைக் கைவிட்ட இளம் தாய் கைது

**எம். செல்வராஜா**

தனது இரண்டரை வயது நிரம்பிய பெண் குழந்தையையும் ஐந்து மாதங்களேயான ஆண் சிசுவையும், விஹாரை மண்டபத்தில் விட்டுவிட்டு தலைமறைவாகிய 28 வயது தாயை, கொஸ்லாந்த பொலிஸார், நேற்று முன்தினம் (01) கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## யானைகள் இரண்டின் சடலங்கள் மீட்பு

**காஞ்சனகுமார ஆரியதாஸ**

கலேவெல பிரதேசத்தில் உள்ள வீட்டுத்தோட்டமொன்றின் பின்புறமிருந்து உயிரிழந்த 2 யானைகளின் சடலங்கள் நேற்று (2) பிற்பகல் மீட்கப்பட்டன என, கலேவல பிபிதுனு வனஜீவராசிகள் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மஹிந்த தேசப்பிரிய பதவியை துறக்கிறார்?



தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, செப்டெம்பர் 15ஆம் திகதியன்று, தனது பதிவியை இராஜினாமாச் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார். இதுதொடர்பில், இன்றைய தினம் முக்கிய அறிவிப்பொன்றை அவர் விடுப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## ‘1,000 ரூபாய் கண்டிப்பாக வழங்கப்படும்’



தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளத்தை 1,000 ரூபாயாக அதிகரிப்பதற்கு, பெருந்தோட்ட நிறுவனங்கள் இணங்கியுள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹட்டன்- எபோட்சிலி தோட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே,

தொடர்ச்சி P2



## வாருங்கள், வாக்களியுங்கள் ‘அச்சம் வேண்டாம்’

வாக்களிப்பு மத்திய நிலையங்களுக்குள் எந்தவகையிலும் கொரோனா வைரஸ் தொற்றுவதற்கான வாய்ப்புகள் வெகுகுறைவெனத் தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, வாக்களிப்பு நிலையங்களுக்கு வாருங்கள், வாக்களியுங்கள் என, அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## கழுகுக்குப் பின் பூனை சிக்கியது

சிறைச்சாலைக்குள் போதைப்பொருள்கள், சிம் அட்டைகள் உள்ளிட்ட சட்டவிரோதமான பொருள்களைக் கடத்துவதற்கு, பயிற்சியளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பூனையொன்று, சிறைச்சாலை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## குடிநீர் பிரச்சினைக்கு ‘பாதீட்டினூடாகத் தீர்வு’

### பதுளையில் ஜனாதிபதி கோட்டாபய உறுதி

பல மாவட்டங்களில் மக்கள் முகங்கொடுத்து வருகின்ற குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இம்முறை வரவுசெலவு-திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக, ஜனாதிபதி நாடு பூராகவும் மேற்கொண்ட விஜயங்களின்போது, குடிநீர் பிரச்சினையையே மக்கள் பிரதானமாக முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ரணிலிடம் சஜித் விசேட கோரிக்கை



ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து, மக்கள் பிரதிநிதிகளை வெளியேற்றுவதைத் தாமதப்படுத்துமாறு, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவால், ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## இன்று கூடுகிறது அரசமைப்பு பேரவை

அரசமைப்பு பேரவையின் மற்றுமொரு கூட்டம், அதன் தலைவரும் எட்டாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகருமான கரு ஜயசூரிய தலைமையில் இன்று (03) கூடவுள்ளது.

இதில், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உள்ளிட்ட அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

“மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றில் காணப்படும்



தொடர்ச்சி P2

## இலங்கையில் கொவிட்-19 முதல் குழந்தை பிரசவம்

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு, அறுவைச் சிகிச்சையின் மூலமாக, சிசுவொன்று பிறந்துள்ளது. இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான, கர்ப்பிணியொருவர் சிசுவொன்றைப் பிரசவித்தமை இதுவே முதல் தடவையாகும்.

டுபாயிலிருந்து ஜூலை 10ஆம் திகதியன்று நாடு திரும்பிய மேற்படி கர்ப்பிணிப் பெண், கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அங்கு தனிமைப்படுத்தப்பட்டார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பொதுத் தேர்தலில் ‘சவால் இல்லை’

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில், நேற்றுமுன்தினம் (01) நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்களுடைய அணியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மக்கள் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர், ‘சோம்பேறி தேர்தல்’ என, ஏற்கெனவே, கூறிவிட்டேன் என்றார்.

## வாக்களிக்காமல் விடுவது ‘கொடூர பாவம்’



தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் எனவும் வாக்களிக்காமல் விடுவது கொடூர பாவம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குற்றச்சாட்டுகள் மத்தியில் ‘உண்மை வெல்லும்’



கொழும்பில், நேற்று முன்தினம் (01) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## அரசாங்கத்தின் மீதான ‘நம்பிக்கை சரிந்தது’



அதை நடத்தியிருந்தால், விளைவுகள் மோசமானவையாக இருந்திருக்கும் என்றார்.

கொழும்பில் நேற்று (02) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் போராட்டத்தை நடத்தவேண்டும் எனத் தெரிவித்த அவர், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அதை முன்னெடுக்க வேண்டும். ஆகையால், மிகவும் பலம்மிக்க குழுவொன்றை, எங்களிலிருந்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள் எனக் கேட்டுக்கொண்டார்.

## ‘1,000 ரூபாய் கண்டிப்பாக வழங்கப்படும்’

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

“பெருந்தோட்ட மக்களுக்குப் பாரிய பிரச்சினைகள் உள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக்குகள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு கிடைக்கவில்லை என்றாலும் அவர் உங்களுக்காகவும் பாரிய பங்கை ஆற்ற தயாராகவிருப்பதாகத் தெரிவித்தார்.

“தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளத்தை 1,000 ரூபாயாக அதிகரிப்பதுத் தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களில் நீண்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்து வந்தாரென்றும் இதற்கமைய பெருந்தோட்ட நிறுவனங்கள் ஆயிரம் ரூபாயை வழங்க இணங்கியுள்ளன” என்றுத் தெரிவித்தார். கொரேனாவால் இந்த நடவடிக்கை தாமதமாகியதென்றாலும் விரைவில் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்றார்.

> கொரேனாவால் இந்த நடவடிக்கை தாமதமாகியதென்றாலும் விரைவில் 1,000 ரூபாய் வழங்கப்படும்

“அத்துடன் பெருந்தோட்டங்களிலுள்ள பாடசாலைகளின் நிலை மீண்டும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. தனது நோக்கம் சிங்கள பாடசாலைகளைப் போல, பெருந்தோட்டங்களில் உள்ள பாடசலைகளையும் முன்னேற்றுவதேயாகும்” என்றார். “தான் அமைச்சராகவிருந்தபோது, படித்த தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு சமுர்த்தி நியமனங்களை வழங்கியதுடன், ஆசிரியர் நியமனங்களையும் வழங்கியதாகத் தெரிவித்ததுடன், அதன் பிறகு தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு எவ்வித நியமனங்களும் வழங்கப்படவில்லை என தான் நினைப்பதாகவும் தெரிவித்தார்.

## 35,000 வீடுகளுக்கும் காணி உறுதி

பிரதமரின் இணைப்புச் செயலாளரும் பதுளை மாவட்ட வேட்பாளருமான செந்தில் தொண்டமானின் அழைப்பை ஏற்று, பசறைக்கு நேற்று முன்தினம் (01) வருகை தந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இதன்போதே, செந்தில் தொண்டமான் மூன்று கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளார்.

பெருந்தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு இதுவரை அரசாங்க காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும் எனவே, தேர்தலின் பின்னர் அமையப்போகின்ற அரசாங்கத்தின் ஊடாக, இந்த உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அது மாத்திரமன்றி ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ள ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளில், பதுளையிலுள்ள அங்கவீனமுற்றோர், மனநலம் பாதிக்கப்பட்டோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் செந்தில் தொண்டமானால் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் அனைத்து தோட்டப் பிரிவுகளிலும் நவீன வசதிகளுடன் கூடிய வாசிகசாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற மூன்றாவது கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.



## மஹிந்த தேசப்பிரிய பதவியை துறக்கிறார்?



அப்பதவியிலிருந்து அவர், விலகுவதற்கு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தேர்தல் பணிகளில் 37 வருடங்களாகப் பணியாற்றிய தான், தனிப்பட்ட காரணங்களால், முன்கூட்டியே பதவி விலகத் தீர்மானித்துள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார். தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2020 நவம்பர் 13ஆம் திகதி முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரணிலிடம் சஜித் விசேட கோரிக்கை

மூன்றாவது தரப்பின் ஊடாகவே, இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டு உள்ளதெனவும் அதற்கு, ரணில் விக்கிரமசிங்க, சாதகமான பதிலொன்றை அளித்துள்ளாரென்னும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு, கௌரவமளிக்கும் வகையிலேயே, கட்சியிலிருந்து உறுப்பினர்களை வெளியேற்றுவதைத் தாமதப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளாரென அந்தத் தகவல்கள் தெரிவித்தன. ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த, ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் அடங்கலாக, 150 பேர், கட்சி செயற்குழுவின் தீர்மானத்துக்கு அமைய, வெளியேற்றப்பட்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் இன்னும் 200 பேரை, கட்சியிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, ஐ.தே.க அறிவித்துள்ளது. இந்நிலையிலேயே சஜித் பிரேமதாஸவால் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சஜித் பிரேமதாஸ, லக்ஷ்மன் கிரியெல்ல, ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாசீம், கயந்த கருணாதிலக்க ஆகியோர் தொடர்பில், ஐ.தே. கவின் செயற்குழுவினால், தீர்மானமொன்று இவ்வாரம் எட்டப்படவிருந்தது. எனினும், சஜித் பிரேமதாஸவின் கோரிக்கையை அடுத்து, செயற்குழுவின் கூட்டமும் பிற்போடப்பட்டுள்ளதென அறியமுடிகின்றது.

## ‘அச்சம் வேண்டாம்’

தேர்தல் பிரசாரம், நேற்று (02) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்துவிட்டது. அதற்குப் பின்னர் எந்தவகையிலும் பிரசாரங்களை முன்னெடுக்கமுடியாது. வீட்டுக்கு வீடு செல்லவும் முடியாது எனத் தெரிவித்த அவர், தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக, நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு பணிக்கப்பட்டது என்றார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகைதரும்போது, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டுமென ஆலோசனைகளை வழங்கியுள்ள அவர், அச்சமின்றி வாக்களிக்க வருமாறு, வாக்காளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, இதுவரையிலும் தேர்தல் சட்டங்களை மீறிய முறைப்பாடுகள், 6,483 கிடைத்துள்ளனவென, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## இளம் தாய் கைது

கொஸ்லாந்தை பொலிஸாரால் மீட்கப்பட்ட இரண்டு குழந்தைகளும் கொஸ்லாந்த அரசினர் வைத்தியசாலையின் விசேட அறையொன்றில் வைக்கப்பட்டு தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தனது கணவருக்கும் தனக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்று வந்த பிரச்சினை காரணமாக, கணவருடன் தொடர்ந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டது என்றும் அதனால், விஹாரையில் குழந்தைகளை விட்டுவிட்டு, நிக்கபொத்தை எனும் பகுதியிலுள்ள உறவினரின் வீட்டில் தங்கியிருந்ததாகவும், விசாரணைகளின் போது, குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

## யானைகள் இரண்டின் சடலங்கள் மீட்பு

35 வயதுடைய இரண்டு ஆண் யானைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த யானைகளின் தலையில் காயங்கள் காணப்படுவதால், துப்பாக்கிச் சூட்டுக்கு இந்த யானைகள் இலக்காகியிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதனால் இந்த யானைகள் உயிரிழந்தன என்பது தொடர்பில் அறிவிக்க முடியாதிருப்பதால் மரண பரிசோதனையின் பின்னரே உயிரிழந்தமைக்கான காரணத்தை அறியலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

## ‘பாதீட்டினூடாகத் தீர்வு’

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில், பதுளை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், நேற்று முன்தினம் (01) பதுளையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இன்று கூடுகிறது அரசமைப்பு...

ஆகியவற்றில் காணப்படும் வெற்றிடங்கள், இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் காணப்படும் வெற்றிடங்கள் ஆகியவற்றை நிரப்புவது தொடர்பில் கலந்துரையாடப்படும்” என, அரசமைப்பு பேரவையின் செயலாளரும், நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

“நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, தேசிய கொள்வனவு ஆணைக்குழு ஆகியவற்றால் முன்வைக்கப்பட்டுள்ள காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், இதன்போது மதிப்பீடு செய்யப்படவுள்ளன” என்றார்.

## இலங்கையில் கொவிட்-19...



அங்கு, அப்பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில், கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதையடுத்து, கொரோனா வைரஸ் தொற்று உள்ளாகியிருக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, விசேடமாக நிறுவப்பட்டுள்ள கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் விசேட பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

அந்தப் பிரிவில் ஜூலை 23ஆம் திகதியன்று அனுமதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு, நேற்றுமுன்தினம் (01) பிரசவவலி ஏற்பட்டுள்ளது.

அதையடுத்து, அப்பெண்ணிடமிருந்து கொரோனா வைரஸ், வெளிப்புற சூழலுக்குள் நுழைவதைத் தடுக்க, மருத்துவர்கள், தாதியர்கள் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது.

மருத்துவர்கள், தாதியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 35 பேரைக் கொண்ட விசேட குழுவால், அப்பெண்ணுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நுண்ணுயிரியல் வைத்தியர்களும் இதில், ஈடுபட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

பிறந்த சிசு ஆரோக்கியமாக இருந்தபோதிலும், சிசுவின் உயிரியல் மாதிரிகள், கொவிட்-19 பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. அதில், சிசுவுக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருக்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## கழுகுக்குப் பின் பூனை...

கொழும்பு- வெலிகடை சிறைச்சாலையின் முன்பாக, அங்குமிங்கும் பூனையொன்று உலாவித் திரிந்துள்ளது. அதனை, மிகவும் இலாவகமாகப் பிடித்த சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், அதனை சோதனைக்கு உட்படுத்திய போதே, விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அந்தப் பூனையின் கழுத்தில், சிறிய பொதியொன்று கட்டப்பட்டு இருந்துள்ளது. அதற்குள், 1 கிராம் 7 மில்லி கிராம் ஹெரோய்ன், சிம் அட்டைகள் இரண்டு, மெமரி அட்டையொன்று ஆகியன இருந்துள்ளன. சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய, பிடிக்கப்பட்ட அந்தப் பூனை குறித்த மேலதிக விசாரணைகளுக்காக, பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகள், முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவென பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பாதாளக் குழுவின் தலைவரான அங்கொட லொக்காவால் போதைப்பொருள்களை விநியோகிப்பதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படும், கழுகொன்றும் மீகொட- நாவலமுல்ல, மயான வீதியிலுள்ள விலங்குப் பண்ணையொன்றிலிருந்து ஜூலை 30ஆம் திகதியன்று, அத்துருகிரிய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘முக்கியத் தேர்தல்’

யாழ்ப்பாணம் - வடமராட்சி, மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில், நேற்று முன்தினம் (01) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், “இந்த நாடாளுமன்றத் தேர்தல் அதி முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகக் கருதப்படுகிறதெனவும் அதற்குக் காரணம் என்னவென்றால், இந்த நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட பிறகு அல்லது நாடாளுமன்றம் கூடிய பிறகு, ஒரு முக்கிய அரசியல் சாசனம் முன்வைக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது” என்றார்.

“அரசியல் சாசனம் எதுவும் எமது மக்களுடைய சம்மதத்துடன் மக்களுடைய இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனம் அல்லவெனத் தெரிவித்த அவர், “அரசியல் சாசனம் புதிதாக உருவாக்குவதற்கு விசேடமாக மூன்று விடயங்கள் சம்பந்தமாக அதாவது முதலாவது ஜனாதிபதி ஆட்சிமுறை, இரண்டாவது நாடாளுமன்ற தேர்தல் முறை, மூன்றாவதாக தேசிய பிரச்சினை. அதாவது, தமிழ் மக்களுடைய அதிகாரம் சம்பந்தமான கோரிக்கை” எனவும் கூறினார்.



தாங்கள் 13ஆவது அரசியல் சாசனத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லையெனத் தெரிவித்த சம்பந்தன், அதில் பல குறைகள் இருந்ததாலேயே, அதை ஏற்றுக்கொள்ளவில்லையெனவும் கூறினார்.

“எங்களது அதிகாரத்தை நாங்கள் பெற வேண்டும். ஒரு மக்கள் குழாமுக்கு தனி தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது. அது மறுக்கப்பட்டால் அவர்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமை உள்ளது.

“ஆகையால், இந்தச் சவால்களை எதிர்நோக்க வேண்டிய தமிழ்க் கட்சியொன்று, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டியது அத்தியாவசியம்” எனவும், அவர் கூறினார்.